டாக்டர்
சி.பாலசுப்பிரமணியன்



# சங்ககால மகளிர்

# சங்க கால மகளிர்


**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்**
**எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.**

தமிழ்ப் பேராசிரியர் &
தமிழ்மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை–600 005.



*விற்பனை உரிமை :*

## பாரி நிலையம்

184, பிரகாசம் சாலை
சென்னை-600 108.

முதற் பதிப்பு : டிசம்பர், 1983

நறுமலர்ப் பதிப்பக வெளியீடு

விலை ரூ. 7–00

## ஆசிரியரின் பிற நூல்கள் :

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
காரும் தேரும்
வாழையடி வாழை
முருகன் காட்சி
மனோன்மணீயம் (பதிப்பு)
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
மலர் காட்டும் வாழ்க்கை
இலக்கியக் காட்சிகள்
சான்றோர் தமிழ்
நெஞ்சின் நினைவுகள்
நல்லோர் நல்லுரை
The Status of women in Tamilnadu during the Sangam Age.
A study of the Literature of the Chera country.
Papers in Tamil Literature.

அச்சிட்டோர் :

நாதன் அன் கம்பெனி
வேளச்சேரி, சென்னை - 600 042.
போன் : 431906.

# முன்னுரை

**தொன்**னெடுங் காலந்தொட்டு இடையறாது தொடர்ந்து வளர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் இலக்கியம் இறைவன், இயற்கை, பெண்மை ஆகிய மூன்றனைச் சிறப்பித்து நிற்பதனைக் காணலாம். தொல்காப்பியம் இம்மூன்றினுக்கும் தனிச் சிறப்பிடம் தந்து போற்றுவதனைக் காணும்போது இம்மூன்றன் பழமையும் சிறப்பும் புலனாகும். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடியினரான தமிழர்' வாழ்வில் காலம் கடந்து வாழும் இவ்வுலகியற்றியானுக்கு முதலிடம் தந்து போற்றியிருப்பதனைக் காண்போம். முல்லையில் மாயோனாகவும், குறிஞ்சியிற் கோலக் குமரனாகவும், மருதத்தில் இந்திரனாகவும், நெய்தலில் வருணனாகவும், பாலையிற் கொற்றவையாகவும் தெய்வம் நிலைபெற்றதாகத் தமிழின் முந்துநூலாம் தொல்காப்பியம் கூறும்.

இறைவனையே இயற்கைச் சூழலிற் கண்ட நாடு தமிழ்நாடு. அழகு உறையும் இடங்களிலெல்லாம் ஆண்டவன் கொலுவீற்றிருக்கிறான் என்று கண்டார்கள். இயற்கை மனிதனுக்கு வாழ்வும் வளமும் வழங்கியது. இன்பமும் அமைதியும் தந்து நின்றது. இயற்கையின் இனிய பெற்றியில் ஈடுபட்ட உள்ளம் மாறா மகிழ்ச்சியில் திளைத்தது; ஆழ்ந்த அமைதியில் துலங்கியது.

தமிழர் தம் வாழ்வின் தொடக்க காலந் தொடங்கியே பெண்மையைப் போற்றிச் சிறப்பித்தார்கள். இறைவனையே உமையொரு பாகனாகத் தமிழர் கண்டனர். 'உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன்' அண்ணாமலை அண்ணல் என்று கொண்டு 'அவ்வண்ணாமலையைத் தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே' என்று அறுதியிட்டுரைத்தனர். 'காதல் மடப் பிடியோடும் களிறு வருவன கண்டேன்' என்று திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்ட ஆளுடைய அரசு அகங் குளிரப் பாடுகின்றார். பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருக்கின்ற காரணத்தால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றார் சிவம்பெருக்கும் திருஞான சம்பந்தர்.

மனிதன் வாழ்க்கையிற் பெறத்தக்க பேறுகளில் தலையாய பேறு நல்ல வாழ்க்கைத் துணையைப் பெறுவதாகும். வாழ்க்கையில் எல்லாச்செல்வங்களும்வாய்த்திருந்து இல்லாள் என்ற செல்வம் மட்டும் இயைபாகப் பொருந்தியிருக்கவில்லையென்றால் அதனால் ஒரு பயனும் இல்லை; ஆனால் எச்செல்வத்தினையும் பெறாத ஒருவன் நல்ல மனைவி என்னும் செல்வத்தினை மட்டும் குறைவறப் பெற்று விடுவானேயானால் அவன் வாழ்க்கை வெற்றியடைந்து விடும்

என்பதில் ஐயப்பாடில்லை.

'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை'

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானும் செப்பியுள்ளமை நோக்குக.

சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலமெனலாம். அப் பொற்காலத்தே மிளிர்ந்த பொற்றொடியர் பல்லாற்றானும் மாண்பு நிறைந்த மகளிராகத் திகழ்ந்தனர். சங்க கால மகளிர் பண்பாடு போற்றத்தக்கதாயிருந்தது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் நிறைந்தவர்களாக அவர்கள் துலங்கினர். பெற்றோர் ஆதரவில் வளர்ந்த காலையிலும், பின்னர்ப் புகுந்த வீட்டில் மனை வாழ்வு அமைத்துக் கொண்ட காலையிலும், ஏன் எப்போதுமே அவர்கள் வாழ்வு போற்றத் தக்கதாகவே பொலிந்தது. திருமணத்திற்குப்பின் 'இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே' என்ற அகநானூற்றுத் தொடரின்படி கணவனும் மனைவியும் காதல் நிறைந்து கருத்தொருமித்து இல்லறம் நடாத்தினர். பெண்ணிற் பெருந்தக்கதான கற்பைப் போற்றி வாழ்ந்தனர். ஒரு வீட்டின் மகிழ்ச்சி அவ்வீட்டிற்கு வாய்த்த மனைவியைப் பொறுத்தே அமைந்தது. இதனாலன்றோ 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்' என்ற பழமொழியும் எழுந்தது.

தன் நலம் புதிது உண்டு சென்ற தலைவன் திருமண முயற்சியினை மேற்கொண்டு, தன்னை வரைந்து கொள்ளவில்லை என்ற நிலையில் வாடிய மனத்தளாய் வாழும் மங்கையும், 'கொடுத்தவை தாவெனச் சொல்லினும் இன்னாதோ நம் இன்னுயிர் இழப்பே' என்று குறிப்பிடுவதிலிருந்து, தம் உயிரினும் அருமையுடையதாக அவர்கள் போற்றிய பண்பின் திறப்பாடு தெரிய வருகின்றது. எத்துணைத் துன்பம் வந்திடினும் மடல் ஏறாத மாண்பு போற்றப்படுகின்றது.

இவ்வாறு பல்லாற்றானும் பெருமை சான்ற சங்க கால மகளிர்தம் ஒழுகலாறுகளையும் பண்பாடுகளையும் பரக்கப் பேச வேண்டும் என்ற அவாவில் எழுந்ததே இந்நூல்.

வழிபடு தெய்வம் முருகனைப்பற்றி நூலெழுதிய யான், சங்க காலப் பெண்மையையும் எழுத்தில் வடித்துக் காட்ட வேண்டும் என்ற பெருநோக்கில் இந்நூலினையும் யாத்துள்ளேன். என் மனத்திற்கு நிறைவினை நல்கும் இச்சிறு நூலினைப் பெண்மையைப் பேணிப் பாராட்டும் தமிழ்கூறு நல்லுலகிற்குமுன் வைக்கின்றேன்.

சி. பா.

# சங்ககால மகளிர்

தமிழ் நாட்டிற்கே சிறப்பினை நல்கும் பழந்தமிழ் இலக்கியங்களின் உயிர்ப் பொருளாக இலங்கும் மகளிர்பற்றி இந்நூல் அமைகின்றது.

எல்லாம் வல்ல இறைவனை - பிறவா யாக்கைப் பெரியோனை - உமையொரு பாகனாகக் கண்ட நாடு தமிழ்நாடு. 'பெண்ணின்றேல் ஆணில்லை' என்று வாழ்வியற் கொள்கை எழுந்த நாடு இது.

மங்கைய ராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ – இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா![1]

என்று இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் கவிமணி அவர்கள் பாடினார்.

உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்.[2]

என்று கூறுவர் பாரதிதாசன் அவர்கள்.

---

1. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை; மலரும் மாலையும், பெண்ணின் உரிமைகள் : பக். 148

2. பாரதிதாசன்; பாரதிதாசன் கவிதைகள்; முதல் தொகுதி; பெண்களைப்பற்றிப் பெர்னார்ட்ஷா.

தாலாட்டுப் பாடலிலும் பெண்மையைப் போற்ற அவர் மறக்கவில்லை.

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த
பெண்ணழகே
நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே[3]

என்கிறார்.

பொருளையும் பெரிதென் றெண்ணாள்
பூண்வேண்டாள் தனைமணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
அன்பினால் வருத்தி றக்கும்
உருளைநற் கிழங்கில் தன்னை உடையானுக்
கிருக்கும் ஆசைத்
திருவுளம் எண்ணி எண்ணிச் செவ்விள நகை
செய்கிறாள்[4]

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சங்க காலத்தில் பெண்மை பெரும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. பெண்கள் பண்பாலும் வாழ்வு நெறியாலும் சிறந்தவர்கள் என்ற குறிப்பு நுண்ணிதின் உணர்த்தப் படுகிறது. சங்ககாலப் புலவர்களிலே அறிவுத் திறமும் ஆன்ற புலமை உரமும் நிறைந்த பெண்பாற் புலவருமான ஔவையார்,

---

3. பாரதிதாசன்; பாரதிதாசன் கவிதைகள்; முதல் தொகுதி; பெண் குழந்தை தாலாட்டு பக்:127

4. பாரதிதாசன்; குடும்பவிளக்கு; முதற்பகுதி: பக்:16

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே[5]

என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பொருள்: ''நிலனே! நீ ஒன்றில் நாடேயாக; ஒன்றில் காடேயாக; ஒன்றிற் பள்ளமேயாக; ஒன்றில் மேடேயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லர் ஆண் மக்கள் அவ்விடத்து நீயும் நல்லையல்லது, நினக்கென ஒரு நலமுடையை யல்லை, வாழி'' என்பதாகும்.

ஒரு நாடு சிறப்பதற்கு அந்நாட்டின் மண்வளம் காரண மன்று: அந்நாட்டு ஆடவரின்-ஆண்மக்களின் நடைநலமே-மனநலமே-ஒழுக்கநலமே காரணமாக அமையும் என்பது ஓர் உயரிய உண்மையினை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது.

சங்க கால மகளிர் பலவகையாலும் மாட்சிமை பொருந்தியவர்கள் என்பது இதனால் பெறப்படுகின்றது. புறநானூற்றின் பழையவுரையாசிரியர் 'ஆடவர்' என்ற தொடருக்கு 'ஆண்மக்கள்' என்றே பொருள் விரித்துரைப்பது ஈண்டு உணரத்தக்கது.

இனி, தொல்காப்பியனார் பெண்ணின் பண்புகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பதனை முதலிற் காண்போம்.

அச்சமும் நாணும் மடனும்முந் துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப.[6]

---

5. புறநானூறு; 187

6. தொல்காப்பியம்: களவியல்: 8

அச்சம், நாணம், மடன் முதலிய பண்புகள் பெண்களுக்கே உரிய பெரும் பண்புகளாகப் போற்றப்பட்டன. மகளிர்தம் மனத்திற் குறிப்பின்றித் தோன்றும் நடுக்கம், அச்சம் என்று கூறப்படும். பெண் தன்மையோடு பொருந்தாத புறச் செயல்களில் ஒழுகாது ஒதுங்கி வாழ்தலே நாணம் எனப்பட்டது. அறிந்தும் அறியாத தன்மையினராயிருத்தல் மடன் என்று கூறப்படும்.

> செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
> அறிவும் அருமையும் பெண்பா லான[7]

என்று தொல்காப்பியனார் மேலும் பெண்மையின் பண்புகளைக் குறிப்பிட்டுள்ளார்.

''செறிவு என்பது அடக்கம்; நிறைவு என்பது அமைதி; செம்மை என்பது மனங்கோடாமை; செப்பு என்பது சொல்லுதல்; அறிவு என்பது நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் துணிதல்; அருமை என்பது உள்ளக் கருத்து அறிதலருமை'' என்று இளம்பூரணர் உரை வகுத்துள்ளார்.

இவையெல்லாம் தொல்காப்பியம் பேசும் பெண்ணின் பெருமைகளாகும். தொல்காப்பியனார் 'மாதர் காதல்'[8] என்றும் சொல்லதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனால் பெண்கள் அன்பிற்குரியவர்கள்; காதலித்தற்குரியவர்கள் என்பன பெறப்படுகின்றன. பெண்களுக்கு உயிரினும் நாணம் சிறப்புடையது என்றும், நாணத்தினும் கற்புச் சிறந்தது என்றும் தொல்காப்பியனார் களவியலிற் குறிப்பிட்டுள்ளார்:

> உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று.[9]

---

7. தொல்காப்பியம்: பொருளியல்: 15
8. தொல்காப்பியம்: உரியியல் : 32
9. தொல்காப்பியம்: களவியல்: 23

இதே நேரத்தில் ஆண்களுக்குப் பெருமையும் உரனும் உரிய பண்புகள் என்று குறிப்பிட்டுள்ளார்:

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன**[10]

"பெருமையாவது பழியும் பாவமும் அஞ்சுதல்'' என்றும் ''உரனாவது அறிவு'' என்றும் இளம்பூரணர் உரை எழுதியுள்ளார். பழி பாவங்களுக்கு அஞ்சுதலும், அறிவுத்திறம் பெற்றிருப்பதும் ஆண்மகனின் இயல்புகள் என்று நவிலப் பட்டன.

உளங் கவரும் உடல் வனப்பும், ஆடவர் அவாவுறும் கண்ணிறைந்த பேரழகும் உடைய பெண்ணைக் 'காரிகை' என்றனர். ஆடவர்களால் காதலிக்கும் தகுதி சான்ற காதல் மகளிர் 'மாதர்' என வழங்கப்பட்டனர். ஐம்பொறிகளால் நுகர்தற்கினிய மென்னீர்மை பெண்களுக்கு இயல்பாகவே உரியதாகும். அம் மென்னீர்மையினைச் 'சாயல்' என்றனர். இம்மென்மையான சாயல்,வலிமை வாய்ந்த ஆணின் வன்மையினை அழிக்கும் தகுதி சான்றது எனக் குறுந்தொகை கூறும்:

**நீரோ ரன்ன சாயல்**
**தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.**[11]

இக்குறுந்தொகைப் பாட்டில் மகளிர் மென்மை நீராக வும், ஆணின் வன்மை தீயாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மென்மைத் தன்மைகளையே பெற்றிருப்ப தனால் மகளிர் 'மெல்லியலார்' என வழங்கப்பெற்றனர். ஆயினும் தம் மனத்தை ஒருவழி ஓடவிடாமல், தீய நெறியிற் செல்லவிடாமல் தடுத்துக் காத்து, ஒதுங்கி நின்று தம் பெருமைசான்ற உள்ளத்தின் அமைதியால் தம்மைத் தாமே

---

10. தொல்காப்பியம்: களவியல்: 7

11. குறுந்தொகை: 95 ; 4—5

பாதுகாத்துக்கொள்ளும் ஆற்றல் பெண்டிரின் தனித் திறமையாகும்:

### மகளிர் அழகு

நீர் போன்ற சாயலும், (நீரோரன்ன சாயல்)[12], மயில் போன்ற இயலும் (மயிலியற் சாயல்)[13], நறுமை, தன்மை, மென்மையாகிய இயல்புவாய்ந்த மேனியும்[14], இயற்கை மணமும்[15], மாமைக் கவினும்[16] உடையவர்களாக மகளிர் விளங்கினர்.

பூப்போன்ற கண்களும், மூங்கில் போன்ற திரண்ட தோள்களும், பிறைபோன்று மதியை மயக்கும் நெற்றியும் உடையவராய் மகளிர் திகழ்கின்றனர்[17].

''மூங்கில் போலத் திரண்ட தோள்கள்; ஐந்து வகையாகப் பிரித்துப் பின்னிய நறுமணங் கமழும் கூந்தல்; மானையும் வெல்லும் மருட்சி நிறைந்த பார்வை; மயிலின் சாயல் எல்லாம் உடையவளே! சிலம்பின் உள்ளிடு பரல்கள் ஒலி முழங்க, அணிந்துள்ள அணிகள் ஒளிவிட, கொடியென, மின்னலென, அணங்கென, நீ தளர்ந்தசைந்து வருவாய்! தெரிந்து கொள்ளவே முடியாத நுண்மையான நின் இடையினிடத்தே என் கண்கள் களவாகப் பார்த்தன. செல்வம் நிறைந்த உயர்ந்தோங்கு சிறப்புடைய நின் தந்தையின்

---

12. குறுந்தொகை: 95: 4
13. ,, 2:3
14. ,, 168:4
15. ,, 2:4-5
16. ,, 9 & 199
17. பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக்குறூஉ நுதலும்—குறுந்தொகை: 226:1-3

பழைய பெருநகரிலே, இளமை வேகத்தால் வெளியே பந்தை எறிந்துவிட்டுப் பந்தின் பின்னல் ஓடி வந்தவளே!''[18] என்று தலைமகன் ஒருவன் தலைமகளைக் கண்டு பேசுவதாக அமைந்துள்ள கலித்தொகைப் பாடற்பகுதி மகளிர் உடல் வனப்பினைத் தெள்ளிதின் புலப்படுத்தும்.

இவ்வுடல் வனப்பு தலைமகனின் உள்ளத்தில் வேட்கையை விளைவிக்கும். எனவே தலைமகனுக்கும் தலைமகளுக்கும் ஒத்திருக்க வேண்டிய பண்புகளாகப் பத்துப் பண்புகளைத் தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார்:

> பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே யருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.[19]

ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும், ஒத்த வயதும், ஒத்த உருவும், ஒத்த அன்பும், ஒத்த நிறையும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் எனப் பத்து வகையில் தலைமகள் தலைமகனோடு ஒத்திருக்க வேண்டும் என்று கூறுவர் தொல்காப்பியனார். இவண் 'உருவு நிறுத்த காம வாயில்' என்பது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு என்றவாறு' என்று இளம்பூரணர் குறிப்பிடுவர். எனவே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உடல் வனப்பு, பருவ வயதில் நிற்கும் தலைவன் தலைவியர்க்கு இடையில் காதல் அரும்ப வைக்கும் கருவியாக அமைகின்றது.

மேலும்,

> ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப[20]

---

18. குறிஞ்சிக்கலி: 21:1-7
19. தொல்காப்பியம்: மெய்ப்பாட்டியல்: 25
20. தொல்காப்பியம்: களவியல்: 2

என்று தொல்காப்பியனார் பொருளியலிற்குறிப்பிடுவதனால் காதல் இருவரிடத்தும் தோன்ற நிலைக்களமாக 'உருவு' அமைகிறது எனலாம். 'புணர்ச்சிக்கு வாயில்' என்றே இளம்பூரணர் உரையெழுதுகின்றார்.

இனி, இவ்வாறு பத்துப் பண்புகளால் தலைமகனோடு ஒத்து நிற்குந் தலைமகளின் வாழ்வினை இருபிரிவாகப் பகுத்துக் கொண்டு காண்போம். திருமணத்திற்கு முன்னர்த் தம் பெற்றோர் வீட்டில் வாழும் வாழ்க்கை; திருமணம் முடித்துத் தன் காதற் கணவன் வீட்டில் வாழும் இல்லற வாழ்க்கை என இரு பிரிவுகளாக்கிக் காண்போம். முன்னதனைக் களவு வாழ்க்கை என்றும் பின்னதனைக் கற்பு வாழ்க்கை என்றும் தமிழ் இலக்கணம் கூறும்.

**திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை**

ஆண்மகனுக்குரிய பண்புகளாகப் பெருமை உரன் ஆகிய இரண்டனைத் தொல்காப்பியனார் கூறியுள்ளமை முன்னரே பேசப்பட்டது. ஆணிற்கு வீரம் எனும் பண்பு நிலைக்களனாய் இருந்தது என்பது சங்கப்பாடல்கள் பலவற்றால் அறியத்தகும்.

> **ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
> **களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**[21]

என்ற பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் பாட்டு, போர்க்களத்தில் வீரத்தை விளங்கக் காட்டி, களிறு எறிந்து வெற்றியுடன் திரும்புதல் ஆண்மகனின் அரிய பண்பாகும் என்பதனைத் தெரிவிக்கின்றது. புறநானூற்றின் பிறிதொரு பாட்டொன்று,

---

*21.* புறநானூறு: *312:5-6*

முனைக்குவரம் பாகிய வென்வேல் நெடுந்தகை[22]

என்று குறிப்பிடுகின்றது. இதனால் போர்முனைக்கென்று வாழ்ந்த ஆணின் பெருவீரம் சுட்டப்படுகின்றது. காவற் பெண்டு பாடியுள்ள புறப்பாடலொன்று கொண்டும், போர்க்களத் தொழிலில் மேம்பட்டவன் ஆண்மகன் என்பது புலனாகும்.[23]

இவ்வாறு வன்மை மிக விளங்கிய ஆணின் பண்பிற்கு முரணாக, அன்பும் அருளும் ஆகிய மென்மைப் பண்புகள் நிறைந்த பெண்களைத் தமிழ்ச் சமுதாயம் பெற விழைந்து பண்டைத் தமிழ்மக்கள் அன்பும் அடக்கமும் அறிவும் பண்பும் நிறைந்த பெண்மக்களைப் பெற விரும்பினார்கள் என்பது,

பொய்யா நாவிற் கபிலன்[24]

என்றும்,

புலனழுக்கற்ற அந்தணாளன்[25]

என்றும் தாம் வாழ்ந்த காலத்துப் புலவர் பெருமக்களாலேயே ஒருசேரப் புகழ்ந்து பேசப்பெற்ற கபிலர்தம் ஐங்குறுநூற்றுப் பாடலொன்றால் அறியலாம்;

குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்.[26]

---

22. புறநானூறு: 314.2
23. 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' — புறநானூறு: 86 ; 5-6
24. புறநானூறு: 174 : 10
25. ,, 129
26. ஐங்குறுநூறு: 257 : 1-2

குன்றத்து வாழும் குறவர் இறைவனை வேண்டிப் பாடுகிடந்து பெற்ற பெண் என்பதனால் இந்நாளைபோல் இன்றி அந்நாளில் பெண்மகவு பெற்றோரால் வரவேற்கப் பட்ட சிறப்பினை நன்கு அறியலாம்.

**மகளிர் இளம்பருவ விளையாட்டுகள்**

தங்கள் உடல் அமைப்பிற்கும் உள்ள நிலைக்கும் ஏற்ற விளையாட்டுகளைச் சங்ககால மகளிர் தேர்ந்தெடுத்து விளையாடினர். பூக்கொய்தல், புனல் விளையாடல், ஊசல் அயர்தல், பந்தாடுதல், மணலிற் சிறுவீடுகட்டுதல், கழற்சிக் காய், அம்மனைக்காய் முதலியவற்றைக் கையாற் பிடித்து ஆடுதல் முதலியன மகளிர் தம் இளம்பருவ விளையாட்டுக் களாகும்.

மலைவாழ் மகளிர் தினைப்புனங்களில் தினைக்கதிர் களில் வந்து படியும் கிளிகளைத் தட்டையென்ற கருவி கொண்டு ஓட்டினர், பூமாலையும் தொடுத்தனர் என்பது தெரிய வருகின்றன.

**தினைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்**
**புனக்கிளி படியும் பூங்கட் பேதை.[27]**

கவலையில் தேங்காமல், மகிழ்ச்சி மண்டிய முகத்தினராய், துள்ளலும், எழுச்சியும் நிரம்பிய வாழ்வினராய் மகளிர் சிறுசிறு விளையாடல்களில் ஈடுபட்டனர் என்பது சங்க இலக்கியங்களின் பல பாடல்களால் நன்கு புலனாகின்றது. இவ்வாறு விளையாட்டில் ஈடுபடும் மகளிர் கூட்டத்தினை அந்நாளில் 'ஓரை ஆயம்' என வழங்கினர். 'ஆயம்' என்ற சொல்லே விளையாட்டுப் பருவத்தில் நிற்கும் மகளிர் கூட்டத்தைக் குறிப்பிடும்.

---

27. குறுந்தொகை: 142 : 1-2

''வீட்டின் வெளியே வந்து விளையாடவேண்டிய இளம் பருவத்து மகளிர், தம் தோழியர்களுடன் கூடி விளையாடி மகிழாது, வீட்டின் கண்ணே அடைப்பட்டிருத்தல் அறனுடைய செய்கையும் ஆகாது; அவர்கள் உடலின் ஆக்கத்தையும் சிதைப்பதாகும்'' என்று சங்ககாலச் சான்றோர் சமுதாயம் வற்புறுத்தியது.

விளையா டாயமொடு ஓரை யாடாது
இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்.[28]

எனவே வீட்டில் தங்கி அறத்தினைத் தேய்க்காமல், வீட்டின் புறத்தே போந்து, ''நுங்கும் நுரையுமாகப் பால்போல் கொப்புளித்துவரும் புதுப்புனலில் நெஞ்சு மகிழ நீந்தித் திளைத்து மகிழ்ந்தாடுவோம்'' என்று தோழி தலைவியை அழைப்பதனைக் காணலாம்.

மேலும் மகளிர் பஞ்சாய்க் கோரைப்புல் கொண்டு செய்யப்பட்ட பொம்மையாம் பாவை கொண்டு விளையாடி மகிழ்ந்தனர் என்பதனையும் அறியலாம்.

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும்.[29]

பூந்தாது கொண்டும் பாவை செய்தல் உண்டு.

தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்.[30]

---

28. நற்றிணை: 68. 1-5
29: குறுந்தொகை: 276 : 1-2
30. குறுந்தொகை: 48 : 1-3

பாவைப் பொம்மைக்குப் பால் வாராத முலைகொண்டு பாலூட்டுகின்றாள் ஒரு பெண்.

> **உறாஅ வறுமுலை மடாஅ**
> **உண்ணாப் பாவையை யூட்டு வோளே.**[31]

செந்நிறக் கோடுகளிட்டு அழகாகச் செய்த செப்புக்களும் பொம்மைகளும் கொண்டு சிற்றில் கட்டி விளையாடுகிறாள் தலைவி:

> **சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்**
> **விளையாட.**[32]

அடுத்து, தன்னோடொத்த இளைய மகளிர் சூழ, வகை வகையாக அணி புனைந்து, தைத்திங்களில் நல்ல கணவனை யடையவேண்டித் தவந்தலைப் படுகிறாள்.

> **வையெயிற் றவர் நாப்பண் வகையணி பொலிந்துநீ**
> **தையில் நீராடிய தவந்தலைப் படுவாயே.**[33]

விளையாட்டு மாறாத நிலையில், பிறர் மனைகள் தோறும் சென்று பாடிக் கிடைத்ததைப் பலருக்கும் கொடுத்து நோன்பியற்றுகின்றாள்;

> **பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ**
> **எய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ**
> **சிறுமுத்தனைப் பேணிச் சிறுசோறு படுத்து நீ**
> **நறுநுத லவரொடு நக்கது நன்கியைவதோ.**[34]

இவையெல்லாம் சின்னஞ்சிறு பருவ விளையாட்டுக்களாகும்.

---

31, ஐங்குறுநூறு: 128: 2-3
32. குறிஞ்சிக்கலி: 23: 5-6
33. குறிஞ்சிக்கலி: 23: 12-13
34. குறிஞ்சிக்கலி: 23: 16-17; 20-21

நெய்தல் நில மகளிர் அவலன் (வண்டு) ஆட்டுதலோடு, உரலில் உலக்கையிட்டு அவல் இடித்தலும், வள்ளைப் பூக்கொய்து மாலை தொடுத்தலும் செய்தனர் என்பதனைக் குறுந்தொகை, பதிற்றுப்பத்துப் பாடல்களால் அறியலாம்:

பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்.[35]

அவலெறிந்த உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்.[36]

இளமகளிர் பொன்னாற் செய்த கழற்காய் கொண்டு, மணல் மேடுகளில் நின்று விளையாடினர் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது:

செறியறிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்.[37]

சிறுமனை முற்றத்தில் சிறுமகளிர் கழங்காடுகின்றனர்;

கூரை நல்மனைக் குறுந்தொடி மகளிர்
மணலாடு கழங்கு.[38]

மகளிர் அழகான அருவிகளில் குதித்துக் குடைந்து குடைந்து புனலாடுகிறார்கள்.

காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்
தாமரைக் கண்புதைத்து அஞ்சித் தளர்ந்து
அதனோடு ஒழுகலான்.[39]

---

35. குறுந்தொகை: 238: 1-3
36. பதிற்றுப்பத்து: 29; 1-2,
37. புறநானூறு: 36: 3-4.
38. நற்றிணை: 79: 2-3
39. குறிஞ்சிக்கலி: 3:1-2

### பெண் கல்வி

சங்ககால மகளிர் இயல், இசை, கூத்து என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர். நல்லிசைப் புலமை மெல்லியலார் பலர் அந்நாளில் திகழ்ந் தனர். ஆடவர்க்குரிய கல்வி வேறு; மகளிர்க்கு வேண்டிய கல்வி வேறு. போர், தூது, காவல், பொருளீட்டல் முதலிய துறைகளில் ஆண்மக்கள் ஈடுபட்டதனால் அதற்குரிய துறைக்கல்வியினை ஆண்மக்கள் கற்றனர். மகளிர் தம் குடும்பப் பாங்கிற்குத் துணை செய்யும் கல்வியினைப் பயின்ற னர். கல்வியில் வல்ல மகனையே தாயும் விரும்பினாள்; அறிவுடையோன் ஆற்றுப்படுத்திய வழியிலேயே அரசனும் ஒழுகினான் என்பது புறநானூறு அறிவிக்கும் செய்தி யாகும்,[40] மகளிர் கற்ற கல்வி அவர்தம் உடலுறுப்புக் களுக்குப் பயிற்சி தருவதாகவும் திருமணத்திற்குப் பிறகு இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்குத் துணைசெய்யும் கருவி யாகவும் அமைந்தது. குடும்பக் கல்வியினைத் தாயிடமும், செவிலித் தாயிடமும் (foster-mother) தோழியிடமும் கற்றாள். தோழி (lady-companion) செவிலியின் மகளாவள்;

**தோழி தானே செவிலி மகளே.**[41]

படகில் தலைவி எந்தப் பகுதியில் அமர்கின்றாளோ அந்தப் பகுதியில் தோழியும் அமர்கின்றாள். படகை விட்டு விட்டுத் தலைவி புனலில் குதித்து நீந்தினால், தோழியும் அவ்வாறே செய்கின்றாள்.

> **தலைப்புணைக் கொளினே தலைப்புணக் கொள்ளும்**
> **கடைப்புணைக் கொளினே கடைப்புணக் கொள்ளும்**
> **புணைகை விட்டுப் புனலோ டொழுகின்**
> **ஆண்டும் வருகுவள் போலும்.**[42]

---

40. புறநானூறு: 183
41. தொல்காப்பியம்: களவியல்: 35.
42. குறுந்தொகை: 42. 1-4.

இவ்வாறு நட்பும், அறிவுரையும் அவ்வப்போது தோழியிடமும், செவிலித்தாயிடமும் பெற்ற தலைமகள் இளம் வயதிலேயே இயல், இசை, கூத்து என்னும் தமிழின் மூன்று துறைகளிலும் திறம்பெற்று விளங்கினாள். இளமையிலேயே நிறைகல்வியுற்ற மகளிரை 'முதுக் குறைவி' என அழைத்தனர்.

யாயா கியளே விழவு முதலாட்டி.[43]

சிலப்பதிகாரத்தில், கண்ணகி 'சிறுமுதுக் குறைவி'[44] என அழைக்கப்படுகின்றாள்.

ஐம்பத்திற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சங்கப் புலவர் வரிசையில் இடம் பெற்றிருக்கக் காணலாம். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சிலரின் பெயர்கள் வருமாறு: அஞ்சியத்தை மகள் நாகையார், அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊட்டியார், ஊண்பித்தையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினியார், நக்கண்ணையார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தை, பாரி மகளிர், பூங்கணுத்திரையார், பூதப்பாண்டியன் தேவி, பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினி, பொத்தியார், போந்தைப் பசலையார், மாறோகத்து நப்பசலையார், வருமுலையாரித்தி, வெண்ணிக்குயத்தியார், வெள்ளி வீதியார், வெறிபாடிய காமக் கண்ணியார் முதலியோர் ஆவர்.

இவர்களில் ஔவையார் அரசர்களுக்கே அறிவுரை கூறித் திருத்திய பெருமாட்டி என்பது எல்லோரும் அறிந்ததாகும். காக்கைபாடினியம், சிறுகாக்கை பாடி

---

43. குறுந்தொகை: 10:1

44. 'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்' சிலம்பு: கொலைக்களக்காதை: 68.

ணியம் ஆகிய யாப்பிலக்கண நூல்கள் இரண்டனை எழுதிய காக்கை பாடினியார் என்ற பெண்பாற் புலவர்தம் இயற்றமிழ்ப் புலமை பெரிதும் பாராட்டத்தக்கது. பெண்பாற் புலவர்களின் பாடல் நயமும், பொருள் நலமும் அக்கால மகளிர்தம் இயற்றமிழ்ப் புலமையினை இனிது எடுத்துரைப் பவையாகும்.

### இசைப்புலமைத் திறம்

இயல்பிலேயே மென்மைத் தன்மை வாய்ந்த மகளிர் இசைக்கலையில் சிறந்து விளங்கினர். அவர்கள் குரல் இனிமை நிறைந்ததாக இருந்தது. தாலாட்டுப் பாட்டுப் பாடியே வழிவழி இசையை வளர்த்த மரபினர் மகளிர் அல்லரோ? யானை முதலிய காட்டு விலங்குகளும் கூட அவர்தம் இசைக்குக் கட்டுப்பட்டன.

> ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையிலும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
> மறம்புகல் மழகளிறு உறங்கும்.[45]

''குறமகள் ஒருத்தி, குறிஞ்சிப் பண்ணைத் திறத்துடன் பாட, தினைக்கதிரை யுண்ணவந்த ஒரு யானை அதனை உண்ணாமலும், அவ்விடத்தை விட்டுப் புடை பெயராமலும், அப்பண்ணால் நெஞ்சம் ஈர்க்கப்பட்டு மனமுருகி நின்று கொண்டே உறங்கிவிட்டது'' என்ற குறிப்பு மகளிர் தம் இசைத்திறனுக்கு ஒரு சான்றாகும்.

கொடிய பாலைநிலத்து மறவர்களும் பாலைப்பண்ணை மகளிர், யாழில் வாசித்த அளவில், தம் கொலைக்கருவி கையினின்றும் நழுவிக் கீழேவிழ அவ்விசையால் ஈர்க்கப்

---

45. அகநானூறு: 102: 5-9.

படுவர் என்பது மகளிர்தம் மாண்புறு இசைக்கு மற்று மொரு சான்றாகும்.

**ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை.**[46]

போரிற் புண்பட்ட தம் கணவரது நோயினைத் தாம் பயின்ற இன்னிசையாகிய மருந்தினால் மகளிர் தணிவித்த செய்தி புறப்பாடல் ஒன்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ**
**வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்**
**கைபயப் பெயர்த்து மையிழு திழுகி**
**ஐயவி சிதறி யாம்ப லூதி**
**இசைமணி யெறிந்து காஞ்சி பாடி**
**நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்**
**காக்கம் வம்மோ காதலந் தோழீ**
**வேந்துறு விழுமந் தாங்கிய**
**பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே.**[47]

பத்துப்பாட்டுள் ஒன்றான மலைபடுகடாத்திலும், மகளிர் தம் கணவர் போர்க்களத்தில் உற்ற புண்களின் நோய்க் கொடுமையைத் தணிக்கப் பாட்டிசைத்த செய்தி பேசப் படுகின்றது.

**கொழுநர் மார்பின்,**
**நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென**
**வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்.**[48]

---

46. பொருநராற்றுப்படை: 21–22.
47. புறநானூறு: 281.
48. மலைபடுகடாம்: 302: 304.

### மகளிர் கூத்துப் பயிற்சி

உள்ளக்கருத்துகளை உடலின் உறுப்புகளில் தோன்றும் மெய்ப்பாடுகளால் புலப்படுத்தும் நாடகத்தில் நல்ல புலமை பெற்றிருந்தனர் என்பதும் அறியப்படும். மகளிர் ஆடும் துணங்கைக் கூத்தைப் பற்றிய செய்தி முன்னரே கூறப் பட்டது. விறல்பட ஆடும் பெண் 'விறலி' என வழங்கப் பெற்றாள். யாழ் முதலாகிய கருவி இசைக்கு இயையக் கூத்தாடும் விறலியர் திறம் மலைபடுகடாத்துள் விளக்கமாகப் பேசப்பட்டுள்ளது.

இதுகாறும் திருமணத்திற்கு முன்னர்ப் பெண் ஒருத்தியின் வாழ்வு எவ்வாறெல்லாம் அமைந்திருந்தது என்பதனைக் கண்டோம்.

இனி, திருமணத்திற்குப் பின்னர் மகளிர் வாழ்வு எவ்வா றெல்லாம் துலங்கியது என்பதனைக் காண்போம்.

### திருமணத்திற்குப் பின்னர் வாழ்க்கை நிலை

சின்னஞ் சிறு வயதில் சிறுசிறு சண்டைகள் இட்டுப் பகைத்து நின்ற தலைவனும் தலைவியும் காதலில் தலைப் பட்டு நெஞ்சம் நெகிழ்ந்து நிற்கின்றனர். "தலைவன், தலைவி யின் கூந்தலைப் பிடித்து இழுக்கவும், தலைவி தலைவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும், அன்புடைய செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும், ஒழி யாமல், அயன்மையையுடைய சிறிய சண்டையை முன்பு பொருந்தியிருந்தனர். இப்பொழுது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள், மணம் புரிந்து மகிழும் இயல்பை யுண்டாக்கினாய், ஊழ்வினையே! நீ நிச்சயமாக நன்மைக் கூறுபாட்டினையுடையாய்" என்று இடைச்சுரத்துக் கண்டோர் (the on-lookers of the palai-tract) தம்முள்ளே சொல்லியதாக மோதாசனார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது
ஏதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே.[49]

எங்கேயோ பிறக்கும் தலைவனும் தலைவியும் எதிர்பாராது சந்தித்து ஒருவரோடு ஒருவர் உள்ளத்தாற் பிணிக்கப்படுகின்றனர். இவ்விருவர் தாயரோ தந்தையரோ ஏற்கெனவே உறவுடையவர்கள் அல்லர்; முன்னர் ஒருவரை அறியாத தலைவன் தலைவியர் இருவரும் இப்போது செம்மையான நிலத்தில் விழுந்து கலந்த மழைத்துளிபோலப் பிரிக்க முடியாதவராய் விட்டனர். இவ்வாறு குறுந்தொகைப் பாடலொன்றில் செம்புலப்பெயல்நீரார் என்னும் புலவர் குறிப்பிடுகின்றார்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானு நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.[50]

பெரும்பாலும் களவு மணமே அந்நாளின் நடைமுறையாக (order of the day) இருந்தது. தம்மாற் காதலிக்கப் பெற்ற தலைவனையே மணந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தால் மகளிர் இறைவனை மலர் தூவி வழிபட்டனர்.

''மலைவாணர் பெற்ற மங்கையொருத்தி, தன்னால் விரும்பப்பட்ட தலைவனுக்குந் தனக்கும் விரைவில் மணம் நிகழ வேண்டும் என்ற கொள்கையால், தம் குலமுதற்கடவு

49. குறுந்தொகை: 229.
50. குறுந்தொகை: 40.

ளாய் மலையுறையும் இறைவனை நன்னீருடன் நறுமலர் களைக் கையிற்கொண்டு அருச்சித்து வழிபட்டனள்'' என்று கபிலர் பாடுகின்றார்.

குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேமபலிச் செய்த வீர்நறுங் கையள்
மலர்ந்த காந்தள் நாறிக்
கவிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே.[51]

**காளையை யடக்கிய காளையரை விரும்பிய கன்னியர்:**

முல்லைநில மகளிர் தங்களால் விரும்பி வளர்க்கப்பட்ட வலிய எருதுகளை அஞ்சாது பிடித்து அடக்கிய வீரக் காளை யரையே மணக்க விரும்பினர். ஏறுபொருது, தம் அஞ்சா நெஞ்சத்தினையும் ஆண்மைத் திறலையும் காட்டாத காளை யரை மறுபிறவியிலும் மணக்க அவர்கள் விரும்பவில்லை.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.[52]

ஏறு தழுவுவோர்க்கே கூந்தலம் மகளிர் உரியர் எனப் பேசுகின்றனர்.

கொல்லேறு சாட இருந்தார்க்கு எம் பல்லிரும்
கூந்தல் அணைகொடுப்பேம் யாம்.[53]

இவற்றால் முல்லைநில மகளிர் கை பற்றக் (to win the hand) கொல்லேற்றினை அடக்கும் வீரம் வேண்டப்பட்டது என்பது பெறப்படுகின்றது. இக்காலத்துப் போலன்றிச் சங்க

51. ஐங்குறுநூறு :259
52. கலித்தொகை: 103:63-64
53. முல்லைக்கலி: 1:41-42.

காலத்தே மகளிரை மணத்தில் பெற, மகளிர் அணிகலன் களுக்கெனப் பெரும் பொருளினைப் பரிசாகக் கொண்டுவந்து தந்தார்கள் என்பதனை யறிகிறோம். ஆனால், அதற்காகத் தகுதியில்லாத ஒருவன் பெரும் பரிசுப் பொருள்களைக் கொணர்ந்து தந்தாலும் தம் மகளைப் பழந்தமிழ்ப் பெற் றோர் மணம் செய்து கொடுத்தார்களில்லை என்ற நற் செய்தியினை நாம் அறிய வேண்டும்.

**முழங்குகடன் முழவின் முசிறி யன்ன**
**நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து**
**கொடுப்பினும்**
**புரையர் அல்லோர் வரையலள் இவளெனத்**
**தந்தையும் கொடாஅன்.**[54]

காதலன் ஒருவனைத் தலைவி தன் தலைவனாகத் தேர்ந் தெடுத்துவிட்ட நிலையிலேயே அவனைத் தன் கணவனாகக் கொண்டு விடுகின்றாள். உள்ளம் பறிகொடுத்த நிலையில் உள்ளங் கவர்ந்த கள்வனையே தன் கணவனாக வரித்து விடு கிறாள் குறிஞ்சிப் பெண் ஒருத்தி. அருவியில் குதித்து விளை யாடிய அவள் கையும் காலும் சோர்ந்து தோழிகளாலும் காப்பாற்ற முடியாமல் அருவியோடு அடித்துச் செல்லும் பொழுது அவ்வழியே வந்த தலைமகன் ஒருவன் அவளைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான். அவள் உடலைத் தழுவிக் காப்பாற்றிய அவனையே வரித்துவிட்ட நிலையில்,

**அருமழை தரல் வேண்டின் தருகிற்கும்**
**பெருமையள்.**[55]

ஆகிவிட்டாள். இவ்விடத்தில், "தெய்வத்தைத் தொழுத லின்றித் தன் கணவனையே தொழுதெழும் பெண் ஒருத்தி, பெய்ய வேண்டிய காலத்தில் பெய்த மழைக்குச்

54. புறநானூறு: 383:10-13.
55. குறிஞ்சிக்கலி: 3:6

சமமாவள்''[56] என்று திருவள்ளுவர் கூறிய கருத்தினை நினைக்க வேண்டியுள்ளது. மேலும் தாம் விரும்பிய ஆடவரையே கற்புடைமை பிழையாது குறிஞ்சி நில மகளிர் மணக்கின்ற காரணத்தால்தான் மலைவாழ்நர் வேட்டை தப்பாது வாய்க்கின்றது என்று சொன்னாள். ''கணவரைத் தொழுது எழும் அவரது கற்புச் சிறப்பினால்தான், வேட்டு விச்சியரின் அண்ணன்மாரும், தாம்வைத்த குறி தப்பாது கணை செலுத்தும் ஆற்றலை உடையவராயிருக்கின்றனர்'' என்று குறிஞ்சிக்கலி கூறும் குறிப்பு உற்றுநோக்கி யுணரத் தக்கது.

காந்தள் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்கமை மென்தோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார், கேள்வர்த் தொழுதெழலால்
தம்மையரும்
தாம் பிழையார் தாம்தொடுத்த கோல்.[57]

முல்லை நில மகளிரும் தாம் விரும்பிய ஆடவரையே மணந்து கொள்கின்றனர். ஆயமகளிர் காதலித்தவர் ஒருவரும், கைபிடிப்பவர் பிறிதெருவராகவும் அமையும் இருமணத்தினை, உலகமே பரிசாகக் கிடைப்பதாக இருந்தாரும் ஏற்றுக்கொள்ள மாட்டாத இல்லற நெறியினர் என முல்லைக்கலி முழங்குகின்றது.

வரிமணல் முன்துறைச் சிற்றில் புனைந்த
திருநுதல் ஆயத்தார் தம்முட் புணர்ந்த
ஒருமணந் தான்அறியும், ஆயின் எனைத்தும்
தெருமரல் கைவிட் டிருக்கே அலர்ந்த

---

56. ''தெய்வந் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''—திருச்குறள்: 55.

57. குறிஞ்சிக்கலி: 3:15-18

**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே.**[58]

ஆயர் மகன் ஒருவன் கையாற் புனைந்த கண்ணியை ஆய்ச்சி ஒருத்தி தன் கூந்தலில் முடித்தாள். கண்ணியைக் கூந்தலிற் பார்த்துவிட்டுத் தாய் வினவினால் என்ன காரணத்தைச் சொல்லுவது எனக் கலங்கினாள். தோழி அவள் கலக்கத்தைத் தேற்றிக் கூறுகிறாள்.

''தலைவி! அவனோர் ஆயர்மகன்; நீயோர் ஆயர் மகள். அவன் உன்னை விரும்புகிறான். நீயும் அவனை விரும்பு கிறாய். உன் அன்னை உன்னை நொந்து கொள்வதற்கு இதில் எதுவுமே இல்லை. ஏனெனில் உன் காதல் நெஞ்சத்தைப் போன்றதுதான் அன்னையின் நெஞ்சமும்'' என்று குறிப்பிடு கின்றாள்.

**ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்**
**நின் வெய்யனாயின், அவன் வெய்யை நீயாயின்**
**அன்னை நோதக்கதோ இல்லைமன்; நின்நெஞ்சம்**
**அன்னை நெஞ்சாகப் பெறின்.**[59]

இதனால் பெறப்படுவது, வழிவழியாக ஆயமகளிர் களவு மணம் கொண்டனர் என்பதே. குறுந்தொகைப் புலவரொரு வர் கூற்றும் சங்க காலத்தில் களவுமணம் பெருவழக்காக இருந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றது.[60]

**தொல்காப்பியனார் குறிப்பிடும் மனையுறை மகளிர் பண்புகள்:**

கற்பும், காமமும், நல்ல ஒழுக்கமும், பெண்மைத் தன்மை பொருந்திய பொறுமைப் பண்பும், நிறைவுடைமை

---

58. முல்லைக்கலி: *14:15—21.*
59. முல்லைக்கலி: *7:20-23.*
60. ''அகலிரு விசும்பின் மீனினும்
    பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே''
    — குறுந்தொகை: *44:3-4*

யும், விருந்து போற்றும் மனநலமும், சுற்றத்தினரைத் தழுவும் வழக்காறும் பிறவும் தலைமகளுக்குரிய தலையாய பண்புகள் என்று தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார்.

> கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
> மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்.[61]

இல்வாழ்க்கையாகிய தேருக்கு அச்சாணியாக விளங்கு பவள் தலைவியே ஆவள். ''இல்லாள்'' என்ற சொல் 'இல்லத்தை ஆள்பவள்' என்ற பொருளைத் தரும். மனை யறம் நிகழ்த்தும் உரிமை மகளிர்க்கே வழங்கப்பட்டது. 'மனைவி' என்ற சொல்லும் தலைவியைக் குறிப்பதாகும். கணவனுக்குத் துணையாய் அமைந்து, பாரதியார்

> காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
> காரியம் யாவினுங் கைகொடுத்து
> மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.[62]

என்றபடி, அன்பினால் ஒன்றிவாழும் மகளிர் 'ஒருமை மகளிர்'[63] என்றும், 'வாழ்க்கைத் துணை'[64]

---

61. தொல்காப்பியம்: கற்பியல்: 11
62. பாரதியார் கவிதைகள்: பெண்கள் விடுதலைக் கும்மி: 8.
63. ''ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டாழுகின் உண்டு''—திருக்குறள்: 974.
64. ''மனத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
    வளத்தக்காள் வாழ்க்கைத்துணை''
    — திருக்குறள்: 51.

யென்றும் திருவள்ளுவரால் போற்றப் பெறுகின்றாள். 'எனவேட்டேளே யாயே'[65] என்ற தொடருக்கு 'நின்னை எதிர்ப்பட்டவன்றே நீ வரைந்தாயெனக் கொண்டு, இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்'' என்றும்,

''ஈண்டுந் தலைவியை யாயென்றது எதிர்ப்பட்டஞான்றே கற்புப் பூண்டொழுகுகின்ற சிறப்பை நோக்கி'' என்னும் ஐங்குறுநூற்றின் முதலுரையாசிரியர்[66] எழுதியிருப்பது கொண்டு, கற்பு எனப்படுவது திருமணச் சடங்கிற்குப் பின்னர் அமையும் தலைவியின் வாழ்க்கை நிலையை மட்டும் உணர்த்தாமல், காதற்களவில் ஈடுபட்டிருக்கும் நங்கையினையும் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

''உரிய காதலனை எதிர்ப்பட்ட அப்பொழுதே அவள் அவ்வொழுக்கந் தலைப்பட்டாள் என்று இவ்வுரை அறிவிக்கின்றது. கரணம் (சடங்கு) என்பது திருமண அடையாளம். பெண்ணொருத்தி கன்னிமை கழிந்து மனைவினை புக்காள் என்பதனைக் காட்டும் மனையணி என்பது என் துணிபு'' எனத் தமிழ்க் காதல் என்னும் தம் ஆராய்ச்சிக் கட்டுரை நூலில்[67] டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கற்பு வாழ்வில் தலைமகள் தலைப்படும்பொழுது, அவள் தம் பெற்றோரால் உரிய ஆண்மகனுக்குத் திருமணத்தில் தரப்பட்டாள் என்பது பெறப்படுகின்றது.

---

65. ஐங்குறுநூறு: வேட்கைப்பத்து: 6.
66. மேற்படி பழைய உரை.
67. டாக்டர் வ. சுப. மாணிக்கம்: தமிழ்க்காதல்: ப. 154.

**கற்பெனப் படுவது காணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுக்கக்**
**கொள்வதுவே.**[68]

இவ்வாறின்றித் தலைவியின் பெற்றோர் திருமணத்தில் தலைவனுக்குத் தர உடன்படாதபோது தலைவியோடு உடன் போக்கு (elopement) ஒருப்பட்டுத் தலைவன் வேற்றூர். சென்று தலைவியை மணந்து கொள்வன் என்பதனையும் தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார்.

**கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான.**[69]

ஆயினுங் காலப்போக்கில் பொய் கூறுதலும் வழுப்பட வொழுகலும் தோன்றிய பின்னர்ச் சமுதாயப் பெரியோர்கள் 'கரணம்' எனும் சடங்கினைப் புகுத்தினர் எனத் தொல் காப்பியனார் குறிப்பிடுகின்றார்.

**பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப.**[70]

இந்நூற்பாவிற்கு (Sutra) இளம்பூரணர் பின்வருமாறு உரை விளக்கம் கூறியுள்ளார்:

" இரண்டும் (பொய்யும் வழுவும்) தோன்றுவது இரண்டாம் ஊழியின் கண்ணாதலின், முதலூழியிற் கரணமின்றியே இல்வாழ்க்கை நடந்ததென்பதூஉம், இவை தோன்றிய பின்னர்க் கரணந் தோன்றின தென்பதூஉம் கூறியவாறாயிற்று. பொய்யாவது செய்ததனை மறைத்தல். வழுவா

---

68. தொல்காப்பியம்: கற்பியல்: 1
69. தொல்காப்பியம்: கற்பியல்: 2.
70. தொல்காப்பியம்: கற்பியல்: 4.

வது செய்ததன் கண் முடிய நில்லாது தப்பியொழுகுதல், கரணத்தொடு முடிந்த காலையின் அவையிரண்டும் நிகழு மாதலாற் கரணம் வேண்டுவதாயிற்று.[71]

இனி, மகளிர்தம் கற்புக் காலப் பண்புகளையும் பணி களையும் விரிவாகக் காண்போம்.

கற்பு:

'கற்பு' என்ற சொல்லிற்குக் 'கணவன் கற்பித்த வழி யில் மனைவி நிற்றல்' என்றும், 'கற்போன்ற திண்மை நெஞ்சு உடையளாயிருத்தல்' என்றும் பொருள் விரிப்பர். ''உயிரினும் நாணம் சிறந்தது; அந்நாணத்திலும் கற்புச் சிறந்தது'' என்றும் தொல்காப்பியனார் குறிப்பிடுவர்.[72]

''இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?'' என்று வினவுகின்றார் திருவள்ளுவர்:

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்.[73]**

எனவேதான், இளங்கோவடிகள் கண்ணகியின் பெருமை யினைக் கவுந்தியடிகள் வாயிலாகச் சிறப்பித்துப் பேசும் பொழுது,

**இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்**
**கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.[74]**

---

71. தொல்காப்பியம்: இளம்பூரணர் உரை.
72. தொல்காப்பியம்: களவியல்: 22.
73. திருக்குறள்: 54
74. சிலப்பதிகாரம்: அடைக்கலக்காதை: 142-144

என்று கண்ணகியின் கற்புத் திறலினைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். மேலும் கணவர்க்கு இனிய துணையாக விளங்கும் மகளிர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவது கற்பு என்னும் சீரிய பண்பே என்பதனையும் மறவாது குறிப்பிட்டுள்ளார்.

**காமம்:**

அடுத்து, காமம், அஃதாவது தலைவன்மாட்டு அன்பு நிறைந்த நெஞ்சினளாயிருத்தலாகும். "நீரில்லாமல் இவ்வுலகம் இயங்க முடியாது போலக் காமமில்லாவிட்டால் நாம் இயங்க முடியாது என்பதனை நன்கு அறிந்தனர் நம் தலைவர்" என்று கூறும் தலைவியின் கூற்றால் தலைவன் மாட்டுத் தலைவி கொண்ட அன்பின் திறம் வெளிப்படும்.

> **நீரின் றமையா வுலகம் போலத்**
> **தம்மின் றமையா தந்நயந் தருளி.**[75]

இதுபோன்ற திருவள்ளுவர் காட்டும் காதலன் "இம்மடந்தையோடு எம்மிடையே உள்ள நட்பு முறைகள், உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்புகளைப் போன்றன" என்று குறிப்பிடுகின்றார்.

> **உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன**
> **மடந்தையொடு எம்மிடை நட்பு.**[76]

மேலும், ஆடவர்க்கு அவரவர்கள் மேற்கொண்ட வினையே—கடமையே உயிராக இருக்க, மகளிர்க்குத் தத்தம் கணவரே உயிராக விளங்குகின்றனர் என்று சங்க காலப் புலவரும் அரசரும் ஆகிய பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர நாட்டுச் செம்மல் பாட்டிசைத்துள்ளார்:

---

75. நற்றிணை: 1: 6-7.
76. திருக்குறள்: 1122.

வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்.[77]

**நல்ல குடிப்பிறப்பொழுக்கம்:**

நற்பாலொழுக்கம் எனப்படுவது எவ்வாற்றானும் தங் குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமாகும்.

ஒரு சமயம் பரத்தையின் பிரிந்துவந்த தலைமகனுக்குத் தூதாகப் பாணன் ஒருவன் தலைவியை வாயில் வேண்டி நின்றபோது (seeking the permission to enter) தலைவி, ''அவரிடத்து நமக்குச் சினம் இல்லை; அவர் நம்மால் உபசரித்து வழிபடுவதற்கு உரியவரே அல்லாமல் அளவளாவி மகிழ்தற்குரியரல்லர்'' என்று தன் குடிபிறந்த ஒழுக்க நலந் தோன்ற உரைத்தாள்.

நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரையல் அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ
புலவியஃ தெவனோ அன்பிலங் கடையே.[79]

பிறிதொரு தலைவி, பரத்தையர்பாற் (harlot) சென்ற தலைவன் விட்ட தூதுவர், தலைவன் வீடு திரும்புவதற்கு அவளுடைய உடன்பாட்டை வேண்டியபொழுது, அதனை மறாது வழங்கினாள். தலைவி தலைவனுக்கு வாயில் நேர்ந்தாள் (accepted for the admittance of the hero) என்பதனைக் கேள்வியுற்ற தோழி, ''தலைவன் கொடுமை தன்னைத் துன்புறுத்தவும் அதனைப் பாராட்டாமல் உடம்படுதற்குரிய இக்குடியிற் பிறத்தல் கொடிது'' என்று கூறித் தலைவியின் உயர்ந்த குடிப்பிறப்பொழுக்கத்தினைப் பாராட்டினாள்;

---

77. குறுந்தொகை: 135: 1-2.
79. குறுந்தொகை: 79.

**காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி**
**வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற**
**மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென**
**மறுவருஞ் சிறுவன் தாயே**
**தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.**[80]

இத்தகு பெருமை வாய்ந்த தலைவி, தான் சாவதற்கு அஞ்சவில்லை என்றும், ஆனால் இறந்துபட்டால் தலைவ னோடுகூடி வாழும் இப்பிறப்பு மாறிவிடும் என்று தான் வருந்துவதாகக் கூறுகின்றாள்:

**சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்**
**பிறப்புப் பிறிதா குவது ஆயின்**
**மறக்குவென் கொல்என் காதலன் எனவே.**[81]

இந்தப் பிறவியில் மட்டுமின்றி மறுபிறவியிலும் இவரே தன் நெஞ்சுநிறைந்த கணவராக அமையவேண்டும் என்று தலைவி ஒருத்தி வேண்டிக் கொள்கிறாள்:

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே.**[82]

இதுபோன்றே கண்ணகியும் கோவலன் தன்னைவிட்டுப் பிரிந்தபொழுது ஆற்றியிருந்து, பின்னர்த் தன்னை வந் தடைந்து கழிந்துபோன செயல்களுக்கு வருந்தி நின்ற பொழுது, ''நீங்கள் சான்றோர் போற்றாத ஒழுக்கத்தை மேற்கொண்டீர்கள்; ஆனால் நான் மாறாத நிலைகுலையாத நெஞ்சத்தவளாதலின் நீங்கள் மதுரை செல்ல வேண்டும்

---

80. குறுந்தொகை: 45.
81. நற்றிணை: 387: 7-9.
82. குறுந்தொகை: 49: 3–5;

என்று சொன்னபொழுது மறாது உடன்பட்டெழுந்தேன்'' என்று குறிப்பிடுகின்றாள்:

> **போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்**
> **மாற்றா உள்ள வாழ்க்கையள் ஆதலின்**
> **ஏற்றெழுந் தனன்யான்.[83]**

''பரத்தையர்பாற் சென்று தங்குபவனை அங்ஙனம் சொல்லாமற் காத்தலும், சென்றானென்று நீக்கியொழுகுதலும் மனைவியாற் கூடுமோ? கூடா. சால்புமிக்க கற்புடை நங்கையர் தம்மைக் கணவர் இகழ்ந்தாலும் தாம் அவரைப் போற்றுவர்'' என்று பரிபாடலில் நல்லந்துவனார் பண்புரை பகர்ந்துள்ளார்:

> **சேக்கை யினியார்பாற் செல்வான் மனையாளாற்**
> **காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா**
> **தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
> **இகழினும் கேள்வரை யேந்தி யிறைஞ்சுவார்.[84]**

குடிப்பிறந்த ஒழுக்கம் தலைவிமாட்டுச் சிறந்தொளிர்ந்தது என்பதற்கு மேலும் பல சான்றுகளைக் காட்டலாம். தன்னுடைய செல்வமனையில் செல்வக் குடியில் பிறந்த தன்னைப் பெற்ற தாய் ஒருபுறம் வீற்றிருப்ப, பிறிதொரு புறம் தன்னை வளர்க்கும் தாய் தேன் கலந்த பாற்சோற்றினைப் பொற்கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, சிறுகோலோச்சி அச்சமூட்டவும், செல்வக் குடியிலே பிறந்த குழந்தையாதலால் பசியற்ற காரணத்தால் உண்ண மறுத்துக் காற்சிலம் பொலிப்பத் தோட்டத்துப் பந்தலில் ஓடிஓடி இளம் பருவத்தில் விளையாடிய தலைவி, இற்றை நாளில் புகுந்த வீட்டிலே வறுமை தாக்கித் தான் வாடியபொழுதும், தந்தை

---

83. சிலப்பதிகாரம்: கொலைக்களக்காதை: 81-83.
84. பரிபாடல்: 20: 86-89

கொழுவிய சோற்றினை அனுப்பி வைக்கவும், அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துத் திருப்பியனுப்பிவிட்டு ஒருபொழுது விட்டு ஒரு பொழுது உண்ணுகின்றாள் என்ற செய்தியினை நற்றிணைப்பாடல் ஒன்றில் புலவர் போதனார் குறிப்பிடுகின்றார்:

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலந்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே.[85]

இங்குக் குறிப்பிடப்பெற்ற சங்ககால மகளிரின் இச்சீரிய பண்பு நினைத்தொறும் நினைத்தொறும் வியக்கத்தகும் அரிய பண்பாவதோடு, மகளிர் பண்பாட்டின் ஓர் உயிர் நிலைப் பண்பு என்றும் கொள்ளத்தக்கதாகும்.

இதுபோன்றே பிறிதொரு காதல் தலைவி, தன் தாய் வீட்டுத் தோட்டத்திலுள்ள தேன்கலந்த பாலைக் காட்டிலும் தலைவன் நாட்டிலுள்ள தழையுடைய கிணற்றின் அடியிலுள்ள மான் முதலிய விலங்குகள் உண்டு எஞ்சி மிகுந்த கலங்கல் நீரே இனிமையுடையது என்று துணிகின்றாள்:

85. நற்றிணை: 110.

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே.[86]

பொறையுடைமை:

பொறையுடைமை எனப்படுவது மென்மையான மனத்துடன் பொறுத்துப் போகும் பண்பாகும்.

திருவள்ளுவர், ''தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.[87]

''பொறையுடைமை'' (forbearance) என்றே ஓர் அதிகாரத்தை வகுத்துப் பொறுமைப் பண்பை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை மனித சமுதாயத்திற்கு வற்புறுத்துகின்றார். ஆண்களினும் மகளிரிடத்துப் பொறுமைப் பண்பு மிகுதியாக இலங்கக் காணலாம்.

தாய் குழந்தையைக் கோல்கொண்டு அடிக்கும் நேரத்திலும், அக்குழந்தை 'அம்மா அம்மா' என்றே அழும். அக்குழந்தை போலத் தலைவன் இனியவற்றைச் செய்தாலும், இன்னாமைதரும் கொடிய செயல்களைத் தலைவி மாட்டுச் செய்யினும், தலைவியின் துன்பத்தை நீக்குதற்கு வல்லவன் தலைவன் ஒருவனே யாதலின் அருள் நோக்கிலேயே எப்பொழுதும் பாடு கிடப்பாள் தலைவி என்பதனை நெய்தல் திணைப் பாடல்களைப் பாடவல்ல அம்மூவன் குறிப்பிட்டுள்ளார்.

---

86. ஐங்குறு நூறு: 203.
87. திருக்குறள்: 151.

தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னா வென்னுங் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள் என் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே.[88]

*இதனால்தான் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிரும் தம் காப்பியத்தில் 'அன்பான கணவர் அழியும் வண்ணம் தலைவிக்குத் துன்பம் தந்தாலும் அதனைப் பொறுத்துப் போவதென்பதே பெண்ணாகப் பிறந்துவிட்ட மனைவியின் பெருமையாக அமைவது பொறுத்துப் போவதாகிய பண்பே' என்று குறிப்பிட்டுள்ளார்.*

அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை.[89]

*பிற்காலச் சோழர் காலத்தில் வாழ்ந்து, கவிதையுலகில் என்றும் நிலைத்துவாழும் சுந்தரமாம் ஒரு காப்பியத்தைத் தந்த கம்பநாடர் தாம் இயற்றிய இராமாயணத்தில் தம் காவிய நாயகியாம் சீதையின் பண்புகளைக் குறிப்பிடப் போந்தபொழுது, சீதை உயர்ந்த குடிப்பிறப்பின் உறைவிடமாகவும், பொறுமையின் நிலைக்களமாகவும், கற்பிற்கோர் அணிகலனாகவும் இலங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீர் இலங்கைவெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.[90]

---

88. *குறுந்தொகை: 397: 4-8.*
89. *பெருங்கதை: 4: 14: 98-99.*
90. *கம்பராமாயணம்: சுந்தரகாண்டம்: திருவடி தொழுதபடலம்: 29*

பிற்கால ஔவையாரும் மனைவி தாயைப் போன்ற பேரன்பும், வேலைகாரி போன்று செயலாற்றும் திறமும், திருமகள் போன்று அழகும், பொதுமகள் போன்று இன்பம் நல்கும் பெற்றியும், பூமியைப் போன்று பொறுக்கும் பண்பும், அமைச்சர் போன்று மதிநலமும் கொண்டு விளங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**அன்னை தயையும் அடியாள் பணி யுமலர்ப்**
**பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வண்ணமுறும்**
**வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்**
**பேசில் இவையுடையாள் பெண்.**[91]

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரும் அழகு மாட்சியினையும், காதலன் கருத்தறிந்து நடக்கும் தகவினையும், அச்சமும் நாணும் கொண்டு, ஊடலும் கூடலுங் கொள்ளும் நேரமறியும் திறமும் கற்புடைப் பெண்டிர்மாட்டு அமைய வேண்டிய பண்புகள் என்று குறிப்பிடுகின்றது.

**கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்**
**உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் உட்கி**
**இடனறிந்து ஊடி இனிதின் உணரும்**
**மடமொழி மாதராள் பெண்.**[92]

இதுகாறும் கூறப்பட்டவை மகளிர் பொறுமை பற்றிய பல்வேறு புலவர்களின் கருத்துரைகளாகும்.

**நிறை:**

நிறை என்பதற்கு, 'மறைபுலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமை'' என்று உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் பொருள் விரித்துள்ளார்.[93]

---

91. தனிப்பாடற்றிரட்டு II; பக்கம் 389
92. நாலடியார்: 384.
93. தொல்: கற்பியல்: 11: நூற்பாவுரை.

எத்தகைய இன்னல்கள் வாழ்வில் வந்துற்றாலும் தன் நெஞ்சிற் கொண்ட துன்பத்தினை வெளியே பிறர் அறியப் புலப்படுத்தாமல் தன் நெஞ்சிற்குள்ளேயே நிறுத்திக் கொள்ளும் அரிய பண்பினைப் பொறை எனப் பழந் தமிழர் கொண்டனர்.

தலைவனது பரத்தைமையாகிய கொடுமையால் தலைவி துன்புறுகின்றாளாயினும், தலைவி தலைவன் செய்த குற்றத் திற்குத் தான் நாணப்பட்டு, தனக்கு உயிருக்குயிராக விளங்கும் தோழிக்குக்கூட அறிவிக்காமல் மறைத்துக் கற்பொழுக்கத்திற் சிறப்புற்றிருக்கின்றாள்.

யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமியம் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே.[94]

"தலைவன் பரத்தை வீடு சென்று திரும்பினான். அவன் ஏற்றுக்கொள்ளத் தகாத கொடுமையை யுடையனா யினும், அதனை மனங்கொள்ளாமல், கற்பொழுக்கத்தின் சிறப்பினால் தலைவன் கொடுமையை மறைத்து, அவன் நாணும்படி தலைவி தானே அவனை ஏற்றுக் கொள்ள முன் வருகின்றாள்" என்று தலைவியின் குடும்பப் பண் பாட்டினைத் தோழி வியப்புடன் பேசுகின்றாள்:

யாயா கியளே விழவுமுத லாட்டி
... ... ... ...
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலின் நாணிய வருமே.[95]

---

94. குறுந்தொகை: 9.

95. குறுந்தொகை: 10.

**விருந்தோம்பல்:**

திருவள்ளுவர் இல்லறவியலில் 'இல்வாழ்க்கை' யினைக் கூறி, அதனையடுத்து இல்வாழ்க்கைச் சிறப்பிற்கு இன்றியமையாத இல்லாளை 'வாழ்க்கைத் துணைநலம்' என்று கூறி, அவ் இல்லாள் இனிதளிக்கும் 'மக்கட்பேற்றினை' அடுத்துக் கூறி, அடுத்து அன்புடைமையினையும், அன்பு மீதூர்ந்த வழி, போற்றப்பெறும் 'விருந்தோம்பலை' யும் உரிய இடந்தந்து போற்றியுள்ளார். எனவே தொல்காப்பியனார் விருந்தோம்புதல் தலைவியின்றி நிகழமுடியாதாகையின், தலைவியின் உயர் பண்புகளில் ஒன்றாகக் குறித்துள்ளார். 'விருந்து' என்ற சொல்லிற்குப் 'புதுமை' என்று பொருள் கண்டுள்ளார் தொல்காப்பியனார்.[96]

இளங்கோவடிகளும் விருந்துபோற்றும் அறத்தினை இல்லற வாழ்வில் இணைத்துக் காட்டியுள்ளார்.

> **மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்**
> **விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்.**[97]

கண்ணகி, கோவலன் பிரிவால் அறவோர்க்கு அளித்தல், அந்தணரை ஆதரித்துப் போற்றல், துறவிகளை உபசரித்தல், பழமையான சிறப்பாகத் தொன்றுதொட்டு வரும் விருந்தோம்புதல் முதலிய இல்லறக் கடமைகள் இடையீடுபட்டுவிட்டன என்று வருத்தத்தோடு குறிப்பிடுகின்றாள்;

> **அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்**
> **துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
> **விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.**[98]

---

96. தொல்காப்பியம்: செய்யுளியல்: 231
97. சிலம்பு: மனையறம்படுத்த காதை: 85-86.
98. சிலம்பு: கொலைக்களக் காதை: 71-73.

சீதையைப் பிரிந்த நிலையில் விருந்து கண்டபொழுது இராமன் விருந்து புறந்தருவதற்கில்லையே யெனக் கவல்வானே என்று சீதை வருந்துகின்றாள்:

**விருந்து கண்டபோது என்னுறு மோவென்று விம்மும்.**[99]

சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் சுளியாது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று மகிழ்ச்சியுடன் விருந்துபசரிக்கின்றனர்.

**அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்.**[100]

தன் வீட்டில் விருந்தினர் பலர் வந்து உண்ணுவது வழக்கம். அவர் தடையின்றிப் புகும் வாயிலைப் 'பலர் புகுவாயில்" என்று தலைவி குறிப்பிடுகின்றாள். இராக் காலத்தில் விருந்தினர்களைப் புகவிட்டுப் பின்னும் எவ ரேனும் உள்ளாரோவென ஆராய்வாராகி ஏவலாளர்கள் (வேலைக்காரர்கள்) வினவி, ஒருவரும் இலராக வாயிற் கதவை அடைப்பது சங்ககால வழக்கம் என்பது குறுந் தொகைப் பாட்டொன்றால் தெரிய வருகின்றது.

**... ... ... ... ... ... ... மாலைப்**
**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ வெனவும்**
**வாரார் தோழி.**[101]

---

99. கம்ப ராமாயணம்: சுந்தர காண்டம்: காட்சிப் படலம்: 15.

100. நற்றிணை: 142: 9-11.

101. குறுந்தொகை: 118:2-5

மேலும், 'வந்தார் அனைவருக்கும் நல்வரவேற்பு நல்கும் வளமனை'[102] என்றும் 'உலகமே புகுந்தாலும் பலரோடு சேர்ந்து விருந்துண்ணத் தக்க வாயில்'[103] என்றும் விருந்தோம்பும் செல்வமனைகள் பேசப்படுகின்றன. விருந்து' கணவன் மனைவியரிடையே ஊடல் (sulkiness) தீர்க்கும் வாயிலில் (channel) ஒன்றாகவும் கருதப்பட்டது.[104]

**சுற்றம் ஓம்புதல்**

'சுற்றம் ஓம்புதல்' என்ற தொடருக்கு உறவினர்களை உண்டி முதலியன தந்து பாதுகாத்தல் என்பது பொருளாகும்.

நச்சினார்க்கினியர் இத்தொடருக்குப் பல செய்திகளை உள்ளிட்ட அரியதோர் விளக்கத்தினைத் தம் பொருளதிகார உரையில் வழங்கியுள்ளார். அவ்வுரை வருமாறு;

''கொண்டோன். புரக்கும் நண்புடை மாந்தரும், சுற்றத்தாரும் குஞ்சரம் முதலிய காலேசங்களும் (கால் நடைகள்- cattle) பல படைமாக்களும் உள்ளிட்ட சுற்றங்களைப் பாதுகாத்து அவை உண்டபின் உண்டல்'' என்று உரையெழுதி யுள்ளார்.[105]

முதலாவது தன் கணவன் உவக்க அட்டிற்றொழிலில் (சமையல் தொழில்) மனைவி மேம்பட்டிருக்க வேண்டும்.

---

102. ''வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருண''
—குறிஞ்சிப்பாட்டு: 202-3.

103. ''உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டன் மரீஇ யோனே''
—புறநானூறு: 234:5-6.

104. நம்பியகப் பொருள்: அகத்திணையியல்

105. தொல். கற்பியல்: 11 நூற்பாவுரை.

தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்றுவந்த செவிலித்தாய் நற்றாயினிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றாள்: ''முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவையாமல் உடுத்துக்கொண்டு, குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில், தாளிப்பினது புகை மணப்ப, தானே துழாவிச் சமைத்த இனிய புளிப்பையுடைய குழம்பைத் தன் தலைவன் இனிதென்று கூறி உண்பதனால், தலைவியின் முகமானது நுண்ணிதாக மகிழ்ந்தது'' என்று குறிப்பிடுகின்றாள்.

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.[106]

இதனால் தலைவி, கணவன் உவக்கச் சமையலைத் திறம்படச் செய்து பரிமாறி அவன் மகிழ்ச்சியுடன் உண்ணக் கண்டு தானும் மகிழ்ந்தாள் என்பது பெறப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரான பாரதிதாசனும் தாம் இயற்றிய 'குடும்ப விளக்கில்' இதுபோன்ற காட்சியினை வடித்திருப்பது நினைக்கத்தக்கது.

உண்டனன்: உண்ணக் கண்ட
நகைமுத்தோ உவப்பை உண்டாள்.[107]

---

106. குறுந்தொகை: 167.

107. குடும்ப விளக்கு: மூன்றும் பகுதி.

காவியக் கம்பரும்,

> அருந்தும் மெல்லடகு யாரிட
> அருந்து மோவென வழுங்கும்.[108]

என்று சீதை தான் தன் கணவனுக்கு வாய்க்கு ருசியாக அவன் விரும்பும்படி சமைத்துப் போட முடியாமல் தான் அசோகவனத்தில் சிறையிருக்க வேண்டி நேரிட்டுவிட்டதே என வருந்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அமுதிற்கு மாறாகிய நஞ்சை நுகரினும், தலைவி கையால் தீண்டின பொருள் தனக்கு உறுதியைத் தருதலின், தேவர் களுடைய அமிர்தத்தையொக்கும் எனக்கு என்று, தலைவன் புனைந்துரைத்து, இதற்குக் காரணம் கூறுவாயாக என்று அடிசிலும் (உணவும்) பூவுந் தலைவி தொடுத்தற்கமைந்த நிலையினைப் பாராட்டி மொழிவான் என்று தொல்காப் பியனார் கூறுவர்:

> ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
> வானோர் அமுதம் புரையுமால் எமக்கென
> அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்.[109]

திருமணம் முடிந்த இல்லறத்தின் தலைவாயிலில் இருவ ரும் நுழைந்து மனைவாழ்க்கை மேற்கொண்டொழுகிய பொழுது ஒருநாள் மனைவி வேப்பங்காயினை முன்பு தந் தால் இனிய பொலிவு பெற்ற வெல்லக்கட்டி என்று பாராட் டிக் கூறியதாகத் தோழி தலைவனிடத்தே பிற்றைநாளிற் கூறினாள்:

> வேம்பின் பைங்காயென் தோழி தரினே
> தேம்பூங் கட்டி யென்றனிர்.[110]

---

108. கம்பராமாயணம்; சுந்தரகாண்டம்: காட்சிப் படலம்: 15:1.
109. தொல்காப்பியம்: கற்பியல்: 5.
110. குறுந்தொகை: 196:1-2.

இக்கருத்தினையே பிற்காலத்தெழுந்த நூலான திருவெங்கைக் கோவை பின்வருமாறு குறிப்பிடும்:

**தீம்பால் கமழு மணிவாய்ப்**
**புதல்வர்க்குச் சிற்றெலும்பு**
**பூம்பாவை யாக வருள்வோன்**
**றென்வெங்கைப் பொருப்பிலிளங்**
**காம்பான தோளிமுன் வேம்புதந்**
**தாலுங் கிழக்கரும்பாம்**
**வேம்பா முனக்குக் கரும்பா**
**யினுமின்று வேலவனே.**[111]

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளால் சங்ககால மகளிரின் அரிய பண்புகள் சில விளக்கமுற்றன. இனி, சங்க கால மகளிரின் வீரப் பண்பினை ஓரளவு காண்போம்.

**வீரப்பண்பு:**

வீரம் நிறைந்த ஆடவரையே இளமகளிர் விரும்பினர் என்று முன்னரே கண்டோம். மறக்குடி மகளிரின் வீரத் திறலை 'மூதின் முல்லை' என்று புறப்பொருள் இலக்கணம் கூறும்.[112] மறக்குடி மகளிரை 'மூதின் மகளிர்' என வழங்கினர். மறக்குடியிற் பிறந்த பெண்ணொருத்தி, முதல் நாட்போரில் தன் தமையனும், மறுநாட்போரில் தன் கணவனும் மடிந்த நிலையிலும், தன் குடிக்கு ஒருவனாய் எஞ்சிநிற்கும் தன் இளம் பருவத்து மகனை அழைத்து, அவன் கையில் வேலினைக் கொடுத்து, வெள்ளுடை அணிவித்து, தலைமுடியினை எண்ணெயிட்டு வாரிமுடித்து, செருமுகம் (battle field) நோக்கிச் செல்க என விடுத்ததாகப் புறப்பாடல் ஒன்று கூறும்:

---

111. திருவெங்கைக் கோவை: 403.
112. தொல்காப்பியம்; புறத்திணை இயல்; 4. நூற்பா; இளம்பூரணர் விளக்கவுரை

கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கிவள் தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.[113]

இப்பாடலைப் பாடிய புலவர் ஒக்கூர் மாசாத்தியார், பெண்பாற்புலவர் என்பது ஈண்டுக் கருதத்தக்கது. மறக்குடி மகளிருக்கும் வீரம் மிகுந்த சிறப்பு இதனால் துலங்குகின்றது.

**மனைக்கு விளக்கம்:**

எனவேதான் மகளிரை 'மனைக்கு விளக்கு' என்று போற்றிப் புகழ்ந்தனர்.[114] நான்மணிக்கடிகை எனும் நூலில்,

'மனைக்கு விளக்கம் மடவாள்'[115]

என்றும்,

'மனைக்குப்பாழ் வாள்நுதல் மடவாள்'[116]

என்றும் குறிப்பிடுகின்றது. திருவள்ளுவர் 'புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு, இகழ்ந்து பேசும் பகை

---

113. புறநானூறு: 279.
114. 'மனைக்கு விளக்காகிய வாணுதல்:— புறம்: 314:1.
115. நான்மணிக்கடிகை: 105:1.
116. " 22:1.

வரி முன் காளைபோல் நடக்கும்பெருமித நடை' இல்லை என்பர்.

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை.**[117]

மேலும் அவர், 'மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன?'[118] என்றும், 'மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம்'[119] என்றும் குறிப்பிடுவார்.

''வாழ்வின் ஏற்றத்தாழ்வால் ஒவ்வொரு சமயம் ஒரு துண்டு ஆடையே உடுப்பவராக வறுமையுற்று வாழ்ந்தாலும் அதனைப் பற்றிக் கவலையுறாது, மனம் ஒன்றுபட்டுக் கலந்து வாழ்பவரின் வாழ்க்கையே சிறந்த இன்ப வாழ்க்கை' என்று 'கற்றறிந்தார் ஏத்தும்' கலித்தொகைப் பாடல் ஒன்று கூறும்:

**................................ஒரோ ஒகை**
**ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை.**[120]

இவ்வாறு' இருதலைப்புள்ளின் ஒருயிர்'[121] ஆக மனம் ஒத்து வாழும் கணவன் மனைவியர் இன்ப வாழ்வு சங்க இலக்கியங்களில் யாண்டும் பேசப்படுகின்றது.

---

117. திருக்குறள்: 659.
118. ''இல்லதென் இல்லவள் மாண்பானால்''
—திருக்குறள்: 52.
119. ''மங்கலம் என்ப மனைமாட்சி''
—திருக்குறள்; 60.
120. பாலைக்கலி: 18:9-11.
121. அகநானூறு; 12:5.

**கடவுள் வாழ்த்து:**

சங்ககாலத்தில் திருமணமாகாத மகளிர் திருப்பரங்குன்றம் சென்று, முருகவேளை வணங்கி ''யாம் எம் நெஞ்சமர்ந்த காதலரைக் கனவிற் கூடியுள்ளோம். அது பொய்யாகாமல் நனவின் கண்ணும் யாங்கள் இருவரும் திருமணத்தில் கூடவேண்டும்'' என்று இறைஞ்சுகின்றனர். மணமான மகளிர், தங்கட்கு நல்ல குழந்தைகள் பிறக்க வேண்டும் என நோற்கின்றனர். மேலும் தங்கள் கணவர் மேற்கொண்ட செயல்கள் செம்மை பெறவும், மேற்கொண்ட போரில் வெற்றி வந்தெய்த வரம் அருளவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றனர்;

> **அருவரைச் சேராத் தொழுநர்**
> **கனவிற் றொட்டது கைபிழை யாகாது**
> **நனவிற் சேஎப்ப நின் னளிபுனல் வையை**
> **வருபுன லணிகென வரங்கொள் வோரும்**
> **கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்**
> **செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்**
> **ஐயம ரடுகென வருச்சிப் போரும்.**[122]

மணமான மகளிர் சிவபெருமான், மாயோன், முருகன் முதலாய தெய்வங்களை வழிபட்ட செய்தி கிளத்தப்பட்டுள்ளது. தாமரைப்பூவினைக் கையிலே பிடித்தாற் போலத் தாம்பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளைக் கையினால் தழுவியெடுத்துக்கொண்டு, தம் கணவருடன் பூசனைக்குரிய பூவினையும் நறும்புகையினையும் எடுத்துக் கொண்டு திருக்கோயில்களுக்குச் சென்றனர் என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது:

---

*122. பரிபாடல்: 8;102-108.*

திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்கும் கடவுட் பள்ளி.[123]

சங்ககால மகளிர் தம் தலைவன் மாட்டுக் கொண்ட அன்பு நிலத்தினும் பெரிதாய், வானத்தினும் உயர்ந்ததாய், ஆழ்கடலினும் ஆழமுடைத்தாய் அமைந்தது ஆகும்:

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.[124]

''ஒரு பசுவினால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவையுடைய செல்வச் சிறப்பில்லாத இல்வாழ்க்கை, அழகும் இளமையும் நிறைந்த தலைவி அக்குடும்பத்தில் மணமகளாகப் புகுந்ததன் பிற்பாடு இனிமை நிறைந்த விழாவெனும்படி செல்வச் சிறப்பினையுடைய தாயிற்று'' என்று ஊர்மக்கள் பேசுவதாகத் தூங்கலோரி என்னும் சங்ககாலப் புலவர் கூறுவர்:

ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.[125]

---

123. மதுரைக்காஞ்சி: 461-467.
124. குறுந்தொகை: 3.
125. குறுந்தொகை: 265:4-6.

இவ்வாறு தனக்கு வாய்ந்த மனைவி நற்குண நற்செய் கைகளில் மேம்பட்டு விளங்கும் காரணத்தால்தான் தலைவன், வயது முதிர்ந்துங்கூடத் தான் கவலையின்மை யால் ஆண்டு பலவாகியும் நரையின்றி நலமுடன் வாழ் வதாகக் குறிப்பிடுகின்றான்:

**யாண்டுபல வாக நரையில வாகுதல்**
**யாங்கா கியரென வினவுதி ராயின்**
**மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்.[126]**

இத்தகைய காதற் கணவன் இறந்துபடுவானேயானால் மனைவி இயல்பிலேயே உயிர்வாழ ஒருப்படாள். ''இந்தப் பிறவியில் பிரியமாட்டேன்'' என்று திருவள்ளு வரின் காதலன் கூறிய அளவிலேயே திருவள்ளுவர் காட்டும் காதலி, இனிவரும் பிறவிகளில் பிரிவதாக உணர்ந்து கண் நிறையக் கண்ணீர் கொண்டாள் என்று அறிகிறோம்:

**இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்.[127]**

எனவே அரும்பெறற் கணவனை இழந்த மகளிர், தாம் பின்னர் வாழ விரும்பாதவராய்த் தம்முயிரையும் மாய்த்துக் கொண்டனர். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் சங்க கால அரசன் இறந்ததும், அவன்தன் ஆருயிர் மனைவி பெருங்கோப்பெண்டு அவனோடு ஒருங்கே மாளவேண்டும் என்று விரும்பி அவனை எரியூட்டிய ஈமத்தீயிற்புக முனைந்தாள். அதுபோது சான்றோர் பலர் அவள்செயலைத் தடுத்தனர். அதுபொழுது அச்சான்றோர்களைப் பார்த்துப் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பின்வருமாறு கூறினாள்.

---

*126. புறநானூறு: 191:1-3.*
*127. திருக்குறள்: 1315*

''பல சான்றோரே! பல சான்றோரே! நின் தலைவனோடு இறப்ப நீ போவென்று கூறாது அதனைத் தவிர்க என்று சொல்லி என் செயலை விலக்கும் பொல்லாத துன்பத்தையுடைய பல்வேறு சான்றோரே!

''வெள்ளரி விதை போன்ற நெய்யற்ற நீர்ச் சோறு எள்ளுத்துவை, புளி கூட்டிச் சமைத்த வேளை இலை ஆகியவற்றை உண்டும், பாயில்லாமல் பருக்கைக் கற்கள் மேல் படுத்தும், கைம்மை நோற்கும் பெண்டிர் போன்றோர் அல்லேம் யாம்! ஈமப்படுக்கை உங்களுக்கு அரிதாகத் தோன்றலாம். என் கணவன் இறந்துபட்டான்; ஆதலால் எனக்கு அந்த ஈமத் தீயே தாமரைக் குளத்துத் தண்ணீர் போல இன்பம் தருவதாகும் என்று நீங்கள் அறிவீர்களாக'' என்று கூறினாள்:

பல்சான் றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் சொல்லாது, ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
துணிவரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளென் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்றி வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்குஅரிது ஆகுக தில்ல; எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே.[128]

128. புறநானூறு: 246.

கணவனை இழந்த மகளிர் நிலைகள் மூவகைத்தாகும். காதலன் இறந்தான் எனக் கேள்வியுற்றஅளவில் உடன் உயிர் நீங்குதல் முதல் நிலையாகும்; கணவனின் ஈமத்தீயிற் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்வது இரண்டாம் நிலையாகும்; மூன்றாம் நிலை கணவன் இறந்த பின்னர்க் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ்தலாகும். இவ்வாறு மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது.

காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரொடு
உடனுயிர் வாழ்க்கைக்கு நோற்றுடன் படுவர்.[129]

இம்மூன்றனுள் முதல் நிலையாம் உடனுயிர் நீத்தல் பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி கோப்பெருந்தேவியிடத்தும், இரண்டாம் நிலையாம் ஈமத்தீயில் பாய்தல் பூதப் பாண்டியன் தேவியிடத்தும், மூன்றாம் நிலையாகிய கைம்மை நோன்பு நோற்றல் எண்ணிறந்த மகளிர் மாட்டும் காணப்படுவதாகும்.

கணவனை யிழந்தவர்க்கு அம்முறை சொல்லி உலகில் பிறர் எவரையும் காட்ட முடியாதாகையினால்[130] உடன் உயிர்போகும் முதல் நிலை அரிதாகப் போற்றப்பட்டது.

கணவன் இறந்ததும் ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர் புதைக்கப்பட்ட இடத்தில் சோட்டம் கட்டும் வழக்கம் பண்டை நாளில் இருந்தது.

---

129. மணிமேகலை: 2: 42–47.

130. ''கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவது இல்''
—சிலம்பு: வழக்குரை காதை: 80.

"ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்......
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்."[131]

இன்றை நாளிலும் செய்தித் தாள்களில் கணவன் இறந்ததனைப் பொறுக்கலாற்றாத மனைவி சோர்ந்து உடனே உயிர்விட்டு இருவரும் ஒரே புதைகுழியில் அடக்கம் செய்யப்படும் நிகழ்ச்சியினைக் காணலாகும்.

இரண்டாவதாகிய உடன்கட்டை ஏறும்நிலை புறநானூற்றில் மேலும் சில பாடல்களால் தெரியவருகின்றது.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேல்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் திருப்போர்ப் புறத்துப் பொருது இருவரும் இறந்தபொழுது அவர் உரிமை மகளிர் அனைவரும் உடன்கட்டை ஏறினர் என்று புறநானூறு குறிப்பிடும்:

... ... ... ... ... பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே.[132]

பொதியமலை சூழ்ந்த நாட்டையாண்ட ஆய் அண்டிரன் இறந்தானாக, அவனுடைய உரிமை மனைவியர் உடன் மாய்ந்தனர் என்று குட்டுவன் கீரனார் எனும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.[133]

இவ்வாறு உடன்கட்டையேறும் வழக்கம் இடைக்காலத்திலும் இருந்த செய்தி இலக்கியத்தின் வழியும், கல்வெட்டுச் செய்தி வழியும் புலனாகின்றன.

---

131. மணிமேகலை; 6: 55-59.
132. புறநானூறு: 62: 13-15.
133. புறநானூறு: 240.

திருநாவுக்கரச நாயனாரின் தந்தையார் புகழனார் இறந்தவுடன், அவர் மனைவி மாதினியாரும் உடன் இறந்ததாகப் பெரியபுராணம் கூறும்:

> மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
> சுற்றமுடன் மக்களையும் துகளாக வேநீத்துப்
> பெற்றிமையா லுடனென்றும் பிரியாத உலகெய்தும்
> கற்புநெறி வழுவாமற் கணவனா ருடன்சென்றார்.[134]

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் கி. பி. 957 முதல் 970 வரை சோழ நாட்டையாண்ட அரசனாவன். இவன் பொன்மாளிகைத் துஞ்சியபொழுது (இறந்தபொழுது) இவன் மனைவியருள் ஒருவராகிய வானவன் மாதேவியார் என்பார் உடன்கட்டை ஏறினார் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்ந்து பேசும். திருக்கோவலூர்க் கல்வெட்டு இவ்வருஞ் செயலைப் பின்வருமாறு கூறுகின்றது:

> "செந்திரு மடந்தைதன் சீராஜ ராஜன்
> இந்திர சமானன் இராஜசர் வஞ்ஞனெனும்
> புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
> கரந்து கரவாக் காரிகை சுரந்த
> முன்னுமுகம் பிரிந்த முழங்கெரி நடுவணும்
> தலைமகற் பிரியாத் தையல் நிலைபெறுந்
> தூண்டா விளக்கு ... ... ... ...
> மணிமுடி வளவன்
> சுந்தர சோழன் மந்தர தாரன்
> திருப்புய முயங்கும் தேவி."[135]

இதுபோன்றே முதல் குலோத்துங்கன் தேவி வீரமாதேவியாரும் உடன்கட்டை ஏறியதாக முதல் இராசாதி

---

134. பெரிய புராணம்: திருநாவுக்கரசநாயனார் புராணம், 28
135. M.E.R.

ராசனது 26ஆம் ஆட்சியாண்டிற்குரிய (reignal year) பிரமதேயக் கல்வெட்டுக் கூறுகின்றது.[136]

கணவன் இறந்ததும் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழும் மகளிர் 'ஆளில் பெண்டிர்'[137] என வழங்கப்பட்டனர். தங்களைப் பாதுகாத்தற்கு ஆளில்லாதவர்கள் என்பது இதன் பொருளாகும். பருத்திகொண்டு பஞ்சு நூற்று அதன் வருவாய் கொண்டு வாழ்ந்ததனால் இவர்கள் 'பருத்திப் பெண்டிர்'[138] என்றும் வழங்கப்பெற்றனர். கணவன் இறந்த பிறகு அணிகலன்களைக் களைந்துவிடுதல் காரணமாக இவர்கள் 'கழிகல மகளிர்'[139] என்றும் கூறப்பெற்றனர். இவர்கள் தலைமயிரை மழித்துக்கொண்டனர்; இவ் வழக்கம் பண்டை நாளில் உலக முழுவதிலும் இருந்ததாகத் தெரிய வருகிறது.[140]

இறந்தவர் உரம்பெறவே இருப்பவர் மயிர் மழித்தனர் என்று மேற்புல ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுவர்:[141]

Sir J. G. Fraser, while discussing the reason for sharing locks as an offering for the dead, says, "still it is to be remembered that in the opinion of some people, the hair is the special seat of its owner's strength and that accordingly in cutting their hair and presenting it to the dead thay may have imagined that they were supplying him with a source of energy not less ample and certain than when they provided him with their blood to drink." (Folk in the Old Testament,: Part IV: Ch. iv, p.397.)

---

136. M.E.R.
137. புறநானூறு: 125:1,
138. நற்றிணை : 353.
139. புறநானூறு: 289:14-15.
140. புறநானூறு: 25, 250, 261, 280.
141. Folklore in the Old Testament: Part IV, Ch: III, P. 377

இதுகாறும் கூறியவற்றால் சங்க கால மகளிர் தம் பல்வேறு வாழ்க்கைக் கூறுகளின் நுட்பங்கள் அறியப் பெற்றனர்.

உயர்ந்த நற்குணம் வாய்ந்த பெண் அவள் கணவனுக்கு முடியாக விளங்குகிறாள் என்பதும் பெற்றாம்.[142]

மனைவி என்பவள் ஓர் ஆடவனுக்கு, தொடக்கமாகிய இளமைக்காலத்தில் தலைவியாகவும், நடுத்தர வயதில் துணைவியாகவும், முதிய பருவத்தில் உடல்நலம் பேணும் செவிலியாகவும் விளங்குகின்றாள்.[143]

''அதிர்ஷ்ட தேவதை எல்லா வகையான செல்வப் பேறுகளையும் வழங்க முடியும்; ஆனால் மனைவி என்பவர் வானுலகம் வழங்கும் வற்றாத பெருமைக்குரிய சிறந்த பரிசு'' என்பர் அறிஞர்.[144]

''ஓ பெண்ணே! காதற் பெண்ணே! ஆணின் மனத்தைத் திருத்திப் பக்குவப்படுத்த இயற்கை உன்னைப் படைத்தளித்துள்ளது. நீயின்றேல் ஆண்வர்க்கமாகிய நாங்கள் எல்லாம் மிருகங்களாக இருந்திருப்போம்'' என்கிறார் ஓட்வே என்பவர்.[145]

---

142. "A Virtuous woman is a crown to her husband"-Old Testament Proverbs, XII, 4.

143. "Wife' s are youngmen's mistresses, companions for middle age, and old men's nurses". -Francis Bacon, on marriage and simple life.

144. "All other goods by Fortune's hands are given A wife is the peculiar gift of heaven" — Pope; January and May.

145. "O Woman! lovely woman! Nature made thee to temper man; We had been brutes without you"—Otway, Venice Preserved, I —1.

எனவே, "மனைவிக்கு மதிப்பளியுங்கள்; எளிய பாத்திரத்திற்கு இரங்குவது போன்றே மனைவியை நன்கு பராமரியுங்கள்" என்கிறது விவிலிய நூலின் புதிய ஏற்பாடு.[146]

தமிழ்நாடு உலகிற்கு வழங்கிய உலகச் சான்றோராம் திருவள்ளுவரும், "நிலத்திற்கு உரியவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் வாளா இருந்தால், அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல் வெறுத்து அவனோடு மாறுபட்டு விடும்" என்றார்.

> செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும்.[147]

இதனால் மனைவிமாட்டுக் கணவன் இடையறாத அன்பு செலுத்தி வேண்டுவன பேணித் தந்து விருப்புடன் போற்றி வர வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

எனவேதான் "மனைவி என்ற அரிய செல்வத்தைப் பெற்றவன் வேறு எச்செல்வம் பெறாவிடினும் அதனாற் பேரிழப்பு ஒன்றுமில்லை" என்கிறார் திருவள்ளுவர்.[148]

இங்கர்சாலும், "உண்மையான பெண்ணின் இதயத்தின் சக்கரவர்த்தியாக ஓர் ஆண்மகன் இலங்குவானேயானால், அப்பெண்ணும் அவன் இதயத்தின் பேரரசியாக அமைந்து விடுவாளேயானால் அவன் சாய்க்கடையில் பிச்சைக்காரனாக மரித்தாலும் கவலையில்லை" என்கிறார்.

> "காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு
> பட்டதே இன்பம்"[149]

என்பது அங்கை நெல்லிக்கனி.

---

146. "Giving honour unto the wife; as unto the weaker vessel" New Testament, I, Peter II, 7.
147. திருக்குறள்: 1039.
148. திருக்குறள்: 53.
இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை.
149. ஔவையார்: தனிப்பாடல் திரட்டு. மூதற் பாகம் 9 பக்கம்: 63

# 11.

## மகளிர் நிலை

தமிழ் இனம் உலகில் தோன்றிய இனங்களுள் மிகப் பழமையான இனங்களில் ஒன்று என்பது ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக் கொண்ட உண்மையேயாகும். தற்போதைய தென்னாட்டையும் அதன் தெற்கில் கடல்கொண்ட பகுதியையும் இணைந்ததொரு பகுதி, அந்நாளில் லெமூரியா என வழங்கப்பட்டதாகவும், அப்பகுதியில்தான் மனித நாகரிகம் முதன் முதலில் தோன்றி வளர்ந்தது (cradle of human race) என்றும் அறிஞர் கூறுவர். வடக்கே சிந்து கங்கைச் சமவெளியில் இற்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய நாகரிகம் திராவிட நாகரிகம் என்று கூறுவர் ஹீராஸ் பாதிரியார்.[150] பிற்காலத் தமிழிலக்கணமாம் புறப்பொருள் வெண்பா மாலை,

> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
> முன்தோன்றி மூத்த குடி.[151]

என்று தமிழ்க்குடிநிலையின் பழமையினைப் பேசும். இவ்வளவு பழமையான தமிழினத்தில்–தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் பெற்றிருந்த இடம் மாண்பு நிறைந்தது, சிறப்பானது என்று கூறலாம்.

---

150. "Being Dravidians, the inhabitants of Mohenjo Daro and Northern India, naturally spoke of a Dravidian language" - Rev. Fr. Heras Light on the Mohenjo-Daro Riddle, 14.

151. புறப்பொருள் வெண்பா மாலை; கரந்தைப் படலம்: 14

சங்கத்தமிழ் இலக்கியத்தைத் துருவி ஆய்ந்த சான்றோர் களில் மிகப் பலரும் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

"ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்" (The Tamils Eighteen hundred years ago) என்னும் அரியதோர் ஆராய்ச்சி நூலினை எழுதிய அறிஞர் வி. கனக சபைப்பிள்ளை (V. Kanagasabai Pillai) அவர்கள் "மகளிர் சமுதாய வாழ்வில் சுதந்திரமாக அதே நேரத்தில் தங்களுக்கே இயல்பான நாணத்தோடு கலந்து பழகினர்" என்று குறிப் பிட்டுள்ளார்.[152]

வரலாற்றுப் பேரறிஞர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ் திரியார் அவர்கள் தம் "தமிழர் பண்பாடும் வரலாறும்" என்ற நூலில், "சமுதாயத்தில் பெண்களுக்கு நல்ல சுதந் திரமிருந்தது. புகழ்பெற்ற பல பெண் புலவர்கள் இருந்தார் கள்" என்று எழுதியுள்ளார்.[153]

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர் கள் பெண் உரிமை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"பழந்தமிழ்நாடு பெண் மக்கள் உரிமைக்கு ஓர் இலக் கியம் என்று கூறல் உயர்வு நவிற்சியாகாது. பழந்தமிழ் நூல்களைத் துருவித்துருவி ஆராய்ந்தால் அவற்றில் யாண்டும் பெண்ணுரிமை காணலாம். 'பெண் தாழ்ந்தவள், குறை புடையாள், அடிமை என்னும் உணர்வே அற்றை நாளில்

---

152. V. Kanakasabhai Pillai, 'The Tamil Eighteen hundred years ago' P. 120

153. திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரி: "தமிழர் பண்பாடும் வரலாறும்", பக்கம். 115.

இல்லை. தமிழில் தலைசிறந்து விளங்கும் அகப்பொருள் நூல்களின் உள்ளக்கிடக்கை என்னை? இன்பமன்றோ? உரிமை இல்லா இடத்தில் இன்ப நிகழ்ச்சி ஏது? உரிமையின் ஒழுக்கமன்றோ இன்பம்? இன்ப நுகர்ச்சிக்கு இருபாலாரிடத்தும் ஒத்த உரிமை இயல்புகள் இருத்தல் வேண்டும். ஒத்த உரிமை இயல்புகளே பெரிதும் பழந்தமிழ்நாட்டு ஆண் பெண் வாழ்வாக அமைந்திருந்தன. அவைகளை 'ஒத்த நலனும் ஒத்த குணனும் ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்' என்றும், தலைவன் தலைவியர் அன்பு நிலையை, 'ஒராவிற்கு இருகோடு பூத்தா லென்ன' என்றும் நக்கீரனார் நவின்றிருத்தலை நோக்குக. பழந்தமிழ் நாட்டு மணம் களவாயிருந்ததும் ஈண்டுக் கருதற்பாற்று. பெண்மகள் தனக்கினிய தலைவனைத் தானே தெரிந்தெடுத்துவந்த வழக்கமொன்றே. அந்நாளைய பெண்ணுரிமைக்குப் போதிய சான்றாக நிற்கிறது''.[154]

மதிப்பிற்குரிய என் பேராசிரியப் பெருந்தகையும், மதுரைப்பல்கலைக்கழகத் துணைவேந்தரும் ஆகிய டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் 'பெண்மை வாழ்க' என்னும் தம் நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''சங்க காலம் என்று கூறப்படும் காலத்தில்-அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில்-அரசியல், சமுதாய இயல், வாணிகம் முதலான பல துறைகளிலும் தமிழ்நாடு முற்போக்கு அடைந்திருந்தது. அந்தக் காலத்து இலக்கியங்களை ஆராய்ந்தால், அப்போது பெண்மக்கள் நன்கு மதிக்கப்பட்டிருந்த உண்மையையும் காணலாம். அப்போது தோன்றிய புலவர்களில் முப்பதின்மருக்கு மேல் பெண் புலவர்கள் இருந்திருக்கின்றனர். வேற்றரசரிடம் தூது செல்லக் கூடிய அளவிற்குத் தொண்டு செய்த அவ்வை

154. திரு. வி. கலியாணசுந்தரனார்; பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை: 39-40

யார் போன்ற பெண் புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். பூதப்பாண்டியன் தேவியைப் போல் அரசகுடும்பத்தைச் சார்ந்த பெண்கள் புலமை நிறைந்தவர்களாக விளங்கியதையும் அறிகின்றோம். இசைக் கலையிலும் நடனக் கலையிலும் வல்ல பெண்கள் ஊர்தோறும் பலர் இருந்ததாகவும் அறிகின்றோம். இவ்வாறே பற்பல துறைகளிலும் பெண்கள் ஆண்களோடு நிகரான திறமும் அறிவும் ஆற்றலும் பெற்று விளங்கினர்.''[155]

சங்க கால மகளிரின் இனிய பெற்றியினை நுணுகி ஆராய்ந்துள்ள டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்துரை வருமாறு.

''பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின், பெண் கற்கும் உரிமையும் கவிபாடும் உரிமையும் காதலுரிமையும் காதற்களவு செய்யும் உரிமையும் காதலனை இடித்துரைக்கும் உரிமையும் இல்லறத் தொழிலுரிமையும் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தாள் என்பது நெற்றித் திலகம் (வெளிப்படை).''[156]

இனி, வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் இருவர்தம் கருத்தைக் காண்போம்.

டாக்டர் கே.கே. பிள்ளை அவர்கள், "மகளிர்தம் உடல் மென்மை கருதியும், எதிர்த்து நிற்கும் ஆற்றல் கருதியும் மகளிர் அனுதாபத்தோடு கவனிக்கப்பட்டார்கள்'' என்று குறிப்பிடுகின்றார்.[157]

---

155. டாக்டர் மு. வரதராசனார்; பெண்மை வாழ்க: ப. 11,12

156. டாக்டர் வ. சுப. மாணிக்கம்; தமிழ்க்காதல்: ப. 152.

157. Dr. K.K. Pillai: A Social History of the Tamils Part I, P. 385.

டாக்டர் என். சுப்பிரமணியம் அவர்கள், ''சங்ககாலச் சமுதாயத்தில் மகளிர் நிலை இன்றுபோல் இருந்ததில்லை. ஆனால் அதே நேரத்தில் இன்றைய மகளிர் நிலையிலிருந்து பெரிதளவு வேறுபட்டும் இருந்ததில்லை'' என்கிறார்.[158]

மேலும் அவர் 'பழந்தமிழகத்தில் மகளிர் நிலை' (The status of Women in Ancient Tamilaham) என்ற தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரையில், ''சங்ககாலச் சமுதாயத்தில ஆண்கள் மகளிர்க்குச் சற்றுத் தாழ்ந்த தகுதியினையே வழங்கினர் என்றும் அதை உணர்ந்தோ அன்றிப் பழக்கத் தாலோ மகளிர் தாமாகவே அந்நிலையினை ஏற்றுக் கொண்டனர் என்றும், இன்றுவரை அந்நிலை மாற்றி யமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மகளிர்மாட்டு எழவில்லையென்றும், எனவே மகளிர் நிலை அன்றிலிருந்து இன்றுவரை குறிப்பிடத்தக்க எந்தவொரு மாற்றமுமின்றி இருந்துவருகிறது. (The Sangham society from the point of view of the sexes, was not an egalitarian society and the men granted a markedly inferior status to their woman who consciously or by habit accepted that position. There was no contemporary demand for a revision of that status on philosophical or even practical grounds; and till recently that position has remained without appreciable change") என்றும் குறிப்பிட்டுள்ளார்.[159]

மறைந்த நம் பாரதநாட்டுப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் தம் 'The Discovery of India' என்னும் நூலில், பழங் காலச் சட்ட விற்பன்னர் மனுவின் காலத்தில் மகளிர் நிலை தாழ்ச்சியுற்றிருந்ததென்றும், ஆனால் காவியங்களில்.

---

158. Dr. N. Subrahmanyam, Sangam Polity, P. 285.
159. Dr. N. Subrahmanyam; Journal of Indian History. Vol. XXXVIII, Part I, April, 1960, Serial NO. 112, P. 487.

இல்லத்திலும் சமுதாயத்திலும் மகளிர் மதிப்பானதோர் இடத்தினைப் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருவ தாகவும், பழைய கிரேக்க உரோம நாகரிகங்களை நோக்க, மகளிர் நிலை சற்று மேம்பாடுடனே திகழ்ந்ததாகவும் குறிப் பிட்டுள்ளார். "The legal position of women according to Manu, the earliest exponent of the law, was definitely bad. They were always dependent on somebody on the father, the husband, or the son. They were treated in law, almost as Chattels. And yet from the numerous stroies in the Epics this love was not applied very rigidly and they held an honoured place in the home and in society......Bad as the legal position of women was in ancient India, judged by modern standards, it was far better than in Ancient Greece and Rome; in early Christianity; in the Cannon law of medieval Europe; and indeed, right upto comparatively modern times at the beginning of the Nireteenth century."[160]

சங்க காலத்தில் தமிழரிடத்து நிலவிய வீட்டு வாழ்க்கை (Home life among the Tamils in the Sangam age) என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றில் திரு. கே. ஞானம்பாள் (K. Gnanambal) என்பவர் பின்வருமாறு கூறுவர்:

"பெண் காதலின் ஊற்றாவள்; அவள் சுதந்திரமும், தனித்துவமும் பெற்றவள்; ஆணிற்குச் சமமாக மதிப்போடும் மரியாதையோடும் நடத்தப் பெற்றுள். அவள் குடும்ப பாரத்தைச் சுமக்கும் மிருகம் அல்லள். அவள் இன்றியமை யாதவளும், ஆணின் சரிபாதியானவளும் ஆவள். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் பெண் மரியாதையாகவும் பொலி

160. Jawaharlal Nehru, The Discovery of India, p. 107.

வாகவும் நடத்தப்பட்டாள் (Women is the fountain-head of love. She was free, independent and the equal of man and she was treated with uniform courtesy and respect. She was not a mere household beast of burden. She was indispensable and the vital half of man. She was held in reverence and adoration in the Tamil land of the Sangam age,[161]

இனி, மேற்காணும் கூற்றுக்களின் வன்மை மென்மைகளைச் சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு ஆராயலாம்.

நாம் முன்னரே கண்டபடி, தலைவனுக்கு தலைவியும் பத்துவகைப் பண்புகளால் ஒத்து விளங்குதல் வேண்டும். அவையாவன: பிறப்பு, குடிப்பிறப்பு, ஆண்மை, வயது, அழகு, அடக்கம், அருள், அறிவு, செல்வம் முதலிய பத்துப் பண்புகள் என்பர்.[162]

மெய்ப்பாட்டியலில் இப்பத்துவகை ஒப்புகளைக் (equalities) கூறிய தொல்காப்பியனார் களவியலில்

'ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப.[163]

என்று குறிப்பிட்டார்.

சமுதாயத்தின் நாகரிகத்தை அதன் மொழிச் சொற்களில் கண்டு கொள்ளலாம் என்றும் மொழி நாகரிகத்தை வஞ்சிக்காது என்றும் கூறுவர்.[164]

---

161. K. Gnanambal, Home life among the Tamils in the Sangam age, p. 4.
162. தொல்; மெய்ப்பாட்டியல்: 25
163. தொல்: களவியல்: 2;
164. டாக்டர் வ. சுப. மாணிக்கம்; தமிழ்க் காதல்; ப. 152.

தலைவன் தலைவி, காதலன் காதலி, கிழவன் கிழத்தி என்ற சொற்கள் தமிழில் வழங்குவதைக் காண்க. "அன்பு வாழ்க்கையில் விளங்கிய ஆணையும் பெண்ணையும் கணவன் மனைவி என்று குறிப்பிட்டதோடு தலைவன் தலைவி என்று இருவர்க்கும் சரிநிகரான தலைமை கொடுத்துப் பாராட்டியுள்ளனர்; இருவரும் ஒரு நிகரான உரிமையுடையவர் என்பது பற்றியே அவர்களைக் கிழவன் (உரிமையுடையவன்), கிழத்தி (உரிமையுடையவள்) என்றும் குறிப்பிட்டுள்ளனர். உரிமை (கிழமை) என்பதற்கு உண்மையான அடையாளம் அன்பின் சிறப்பே என்பதைக் கண்டவர்கள் தமிழ்நாட்டு முன்னோர்கள்" ஆவர்.[165]

மேலும், "மேற்கு நாடுகளில் பெண்கள் திருமணமானவுடனே தங்கள் பிறப்புரிமையையே இழந்து விடுகிறார்கள். பிறப்புரிமையைக் காட்டுவது பெற்றோர் வைத்து வழங்கிய பெயர் அல்லவா? அந்தப் பிறப்புரிமையை இழந்து தங்கள் பெயரை மாற்றி வழங்க உடன்படுகிறார்கள் மேற்கு நாட்டுப் பெண்கள். அந்த அடிமை வழக்கம் இந்த நாட்டில் இல்லை"[166] திருமணம் ஆவதற்கு முன்னிருந்த பெயரே திருமணத்திற்குப் பின்னரும் தொடர்கிறது.

அடுத்து, மேற்கூறிய களவியல் நூற்பாவின் இறுதி அடி,

'மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே'

என்பதாகும். மேற்கூறப்பட்ட பத்து வகை ஒப்புகளும் தலைவன் தலைவியருக்கிடையே அமைந்திருக்க வேண்டும். ஒன்றிரண்டு பண்புகளில் தலைவன் கூடுதலாக இருந்தாலும்

165. டாக்டர் மு. வரதராசனார்;
பெண்மை வாழ்க: 26

166. டாக்டர் மு. வரதராசனார்:
பெண்மை வாழ்க: 25.

ஏற்றுக்கொள்ளத் தக்கதே என்பதாகும். சிலர் இத்தொடரினை வைத்துக் கொண்டு மகளிரினும் ஆடவர் சிறந்தவர் என்று கொள்ளுவர். ''மிகுதலாவது குலம் கல்வி பிராயம் முதலியவற்றான் மிகுதல்'' என்று உரை காண்பர் நச்சினார்க்கினியர்.

முதலாவது தன்னினும் வயது முதிர்ந்த பெண்ணை ஆடவன் ஒருவன் மணக்கும் முறை தமிழகத்தில் இல்லை. பெண் விரைவில் முதுமையுடையவளாகின்றாள். பிற்காலத்தில் பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாகப் பெண் ஏழு பருவங்களுக்குரியவளாகப் பிரிக்கப்பட்டாள். இறுதிப் பருவமான பேரிளம் பெண் பருவமே நாற்பது வயது எனக் கொள்ளப்பட்டது. எனவே இளமை நோக்கித் தொடக்கக் காலத்தில் பெண் ஒருத்தியைக் காதலிக்கும் ஆண் ஒருவன் அவள் இளமை மாறிய முதுமைக் காலத்தில் அவள் பண்பை நினைந்து போற்றி வாழவேண்டும் என்பர். அண்ணாந்து உயர்ந்த வனப்பினைக் கொண்ட கொங்கைகள் தளர்ச்சியுற்றுப் போனாலும், பொன்னை நிகர்த்த மேனியிடத்துக் கருமணி போலத் தாழ்ந்திருக்கும் நல்ல நீண்ட கூந்தலானது நரையோடு முடிக்கப்பெறும் தன்மையை அடைந்தாலும் நீ இவளைக் கைவிடுதலாகாது'' என்று உடன் போக்கு (elopement) மேற்கொள்ளும் தலைவனிடம் தோழி கூறி நின்றாள்;

> **அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்**
> **பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த**
> **நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்**
> **நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர.[167]**

இத்தமிழ் மரபினையே பின்பற்றி இக்காலக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் அன்பின், பண்பின்

---

167. நற்றிணை: 10: 1-4.

அடித்தளத்தில் அமையும் இல்லற வாழ்க்கை இளமைக் காலத்திலன்றி முதுமையிலும் மகிழ்ச்சி மண்டிக் கிடப்பதாகவே அமைவதனைத் தம் 'குடும்ப விளக்கு' என்னும் நூலில் 'முதியோர் காதல்' என்ற பகுதியில் 'அவள் உடம்பு புதிய மலர்போல் இல்லாமல் புற்கட்டு போன்று உருத்துவதாக உளது: அவள் நடனமாடும் நடைபோட்டு நடக்கவில்லை; தள்ளாடி நடந்துவிழும் முதியவள்; சந்திரனைப் போன்ற முகம் உடையவள் அல்லள்; வற்றிய நிலத்தில் குழிந்த பள்ளங்கள் போன்று அவள் கண்கள் உள்ளன. இவற்றில் எனக்கு இன்பம் தருவது எது? அவள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்' என்கிற ஓர் நிலையே எனக்கு இன்பத்தை நல்குவதாகும் என்று கணவன் ஒருவன் தன் மனைவி பற்றிக் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்:

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும்மூ தாட்டி
மதியல்ல முகம்அ வட்கு
வறள் நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
இருக்கின்றாள் என்ப தொன்றே.[168]

மேல்நாட்டினரைப் போல் வயது முதிர்ந்த மகளிரை மணக்கும் வழக்கம் தமிழகத்தில் இல்லை. எனவேதான் குலம், கல்வி, வயதால் ஆண்கள் ஒருபடி மேம்பட்டிருக்கலாம் என வகுத்தனர். மேலும் ஆணின் தன்மைகளும் தொழிற்பாடுகளும் வேறு; பெண்ணின் தன்மைகளும் தொழிற்பாடுகளும் வேறாகும். தொல்காப்பியனாரும்

---

168. பாரதிதாசன்: குடும்பவிளக்கு: முதியோர் காதல்.

பெருமையும் உரனும் ஆண்களுக்குரிய இயல்புகள் என்றார்.[169]

பெருமை என்பதற்கு அறிவும் ஆற்றலும் புகழும் கொடையும் ஆராய்தலும் பண்பும் நண்பும் பழி பாவம் அஞ்சுதலும் முதலியனவாய் மேற்படும் பெருமைப் பகுதி என்றும், உரன் என்பது நிலையான தன்மை மாறுபடாது கலங்காது துணிதலும் முதலிய வலியின் பகுதிகள் என்றும் நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார்.[170]

தொல்காப்பியனார் அடுத்த நூற்பாவில் (Sutra), அச்சம், நாணம், மடனும் பெண்பாற்குரிய பண்புகள் என்று குறிப்பிட்டார். அச்சம் என்பதற்கு, அன்பு காரண மாகத் தோன்றிய அச்சம் என்றும், நாணம் என்பதற்கு, காமக்குறிப்பு நிகழ்ந்தபோது ஏற்படும் உள்ளவொடுக்கம் என்றும், மடன் என்பதற்கு, செவிலியர் முதலில் கூறியது கொண்டது, அக்கொண்டதை விடாமை என்றும் உரை யாசிரியர் நச்சினார்க்கினியர் உரைப்பர்.[171]

அடுத்து உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது; அந் நாணத்தைக் காட்டிலும் கற்பு சிறந்தது என்றும்,[172] அடக்கமும், மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளமும், மனம் வளைதலின்மையும், களவின்கண் செய்யத் தகுவன கூறலும், நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும்

---

169. 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'—
தொல்; களவியல்: 7

170. தொல்: களவியல்: 7 நூற்பா உரை.

171. தொல்; களவியல்: 8 நூற்பா உரை.

172. 'உயிரினுஞ் சிறந்ததன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று' —
தொல்: களவியல்: 22

அறிவித்தலும், உள்ளக் கருத்து அறிதல் அருமையும் பெண்ணின் பெரும் பண்புகள் என்றும்[173] குறிப்பிட்டுள்ளார்.

இவற்றால் எல்லாம் நாம் அறிவது ஆணின் உடல் வன்மைக்கும் வெளியுலகத் தொடர்பிற்கும் ஏற்ப ஆணின் இயல்புகள் விளங்கின என்பதும், பெண்ணின் உடல் மென்மைக்கும், குடும்பத்தினை நடத்தும் பாங்கிற்கும் ஏற்பப் பெண்ணின் இயல்புகள் இயல்பிலேயே அமைந்திருந்தன என்பதுமாகும்.

தமிழர் காதல் ஒழுக்கத்தை 'அகம்' என்ற சொல்லால் வழங்கினர். அகம் என்ற சொல்லிற்கு உள்ளம், வீடு போன்ற பொருள்கள் உண்டு. ''அகத்துறை இலக்கியங்களில் எல்லாம் உலகிலேயே ஒப்பற்று விளங்குவது தமிழில் உள்ள அகத்துறை இலக்கியமே'' என்று டாக்டர் தனிநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்[174] மேலும் அவர்,

''பெண்ணின் இயல்பை ஷேக்ஸ்பியரைத் தவிர எவரேனும் அறிவரெனக் கூறுவாரெனின், அவர் அறிவிலர்; அன்றேல் பேரறிஞர் என்ப. பெண் உள்ளத்தை நன்கறிந்து பாடிய செய்யுட்களால், நம் சங்கப் புலவர் பேரறிஞர் எனபது துணியப்படும்'' என்கிறார்.[175]

---

173. ''செறிவும் நிறைவுஞ் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான''—
தொல்: பொருளியல்: 15

174. அறிஞர் தனிநாயக அடிகளார்; தமிழ்த்தூது; ப. 44.

175. அறிஞர் தனிநாயக அடிகளார்: தமிழ்த்தூது: ப. 46.

சங்க இலக்கியங்கள் என்று நுவலப்படும் பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் 2381 பாடல்களைக் கொண்டதாகும். இவற்றில் அகத்திணை பற்றிய பாடல்கள் 1862 ஆகும். அவையாவன:

| | | |
|---|---|---|
| நற்றிணை | 400 | |
| குறுந்தொகை | 401 | |
| ஐங்குறுநூறு | 500 | |
| பரிபாடல் | 8 | |
| கலித்தொகை | 149 | |
| அகநானூறு | 400 | |
| பத்துப்பாட்டு | 4 | (முல்லைப் பாட்டு, நெடுநல் வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, ஆகிய நான்கு) |
| | 1862 | |

பிறபாடல்களிலும் அகப்பாடல் தமிழில் மிகுதி என்பது தெளிவு. அகத்திணைப் பாடல்களிற் பெரும்பாலான பாடல்கள் தலைவியைச் சுற்றியே சுழலக் காணலாம். அகத்திணை நாடகத்தில் இடம் பெறும் பாத்திரங்கள் தலைவி, தலைவன், தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் முதலியோர் ஆவர். இவர்களில் தலைவி, தோழி கூற்றாய் வரும் பாடல்களே மிகுதி. அகத்திணைப் பாடல்களில் பெண் பாத்திரங்களின் உள்ளமும் உணர்ச்சியும் செயலும் செய்தியுமே விளங்கக் கூறப்படுகின்றன.

அகத்திணைப் பாடல்களை நன்கு ஆராய்ந்த டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் முடிந்த முடிவுகளைத் தமிழ்க் காதல் (The Tamil Concept of Love) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் இறுதியிற் பெய்துள்ளார்: அக்கருத்துகள் வருமாறு:

''மனிதர்களின் காதற் செய்கையினை விளக்கிக் காட்டும் இலக்கியத்தில் மகளிர் மதிப்பு சிறந்த இடத்தினைப்

பொதுவாகப் பெற்றுள்ளது. சங்க காலத்தில் ஆண் பெண் உயர்வு தாழ்வு இல்லை. பகுத்தறிவு வாய்ந்த உயர்திணைக் குரியவர்களாகவே ஆண், பெண் ஆகிய இருவரையும் தமிழர் கொண்டனர். கிரேக்கர்கள் செய்தது போன்றே குடும்பப் பொறுப்பினையும். குழந்தை வளர்ப்பினையும் மகளிரிடத்தே ஒப்படைத்தனர். ஒருமை மனமும், கற்புத் திறனும் மகளிர் தம் நீங்காப் பண்புகளாக அமைந்து, இடையீடற்ற குடும்ப வாழ்வின் மேன்மைக்கும் மகிழ்ச்சிக்கும் உதவின. சமுதாயம் மகளிர் தம் நிலைத்த மனச் சான்றினையும் பொறுப்பினையுமேதான் நிலைக்கவும் இயங்கவும் எதிர்நோக்கி நின்றது''. (A literature, the object of which is the treatment of general behaviours of human beings, cannot but show respect for women in general indeed in the Sangam epoch, there was no superiority or inferiority of sexes. The Tamils regarded man and woman as two different beings of the class 'uyartinai' or rational beings. They as the Greeks did, entrusted the management of the family and the bringing up of children to woman, while work outside came to be the responsibility of man. Monogamy and chastity were strictly enjoined on woman for the uninterrupted continuation of family life and for the pro-creation of good and pure progeny. Thus society depended upon the consciousness of women of their responsibility for its stability and existence").[176]

முதலாவதாகக் 'களவு' அடிப்படை அமைந்த பாடல் களை நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளுவோம்.

---

*176.* Dr. V. Sp. Manickam, The Tamll concept Love: p. *317-318*.

களவுத் துறையை விளக்கி நிற்கும் பல பாடல்கள் சமுதாயத்தில் மகளிர் பெற்றிருந்த சுதந்திரத்தினைப் பறை சாற்றுவனவாகும். ''தலைவன் ஒருவனைக் காதலித்து வரும் பெண்ணொருத்திக்கு அவள் பெற்றோர் புதியதோர் இளைஞனுக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளும்பொழுது தோழி அறத்தொடு நின்று (relevation to virtue) தலைவி கொண்டுள்ள காதலைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ பெற்ற தாயிடத்தில் சொல்லு வாள். அவள் தன் கணவனிடத்திலும், மக்களிடத்திலும் அறிவிப்பாள். முதலில் அவர்கள் இக்காதல் திருமணத் திற்கு உடன்படாது ஒரு பகல் முழுவதும் உருத்தெழுந்து மாறுபட்டிருந்தாலும் இறுதியில் அவர்கள் (காதலர்கள்) இருவர்மாட்டும் ஒரு குற்றமும் இல்லை எனத் தெளிந்து தாங்கள் செய்தியைக் கேட்ட அளவிற் கொண்ட கோபத் திற்கு நாணப்பட்டுத் தலையைக் கீழே சாய்க்கின்றனர்''. இவ்வாறு குறிஞ்சிக் கலிப்பாட்டொன்று தெரிவிக் கின்றது.[177]

மேலும் இங்குத் தோழி நற்றாய்க்குச் சொன்ன விளக்கங்கள் நன்கு மனங்கொளத் தக்கவை.

''அருவியில் நீந்திக் களைத்து வெள்ளம் அடித்துச் சென்ற தலைவியைக் காப்பாற்றினான் தலைவன் ஒருவன். வெள்ளத்தில் குதித்துத் தன்னுயிரைப் பொருட்படுத்தாது அவளைத் தழுவி யெடுத்து வந்தபொழுது 'அவன் அகன்ற

---

177. ''அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்து ரைத்தாள் யாய்;
அவரும் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக்
கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந்து ஆறி
இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை.''
—குறிஞ்சிக்கலி; 3: 20–25.

மார்பை இவளுடைய முலைகள் தழுவின' என்று தோழியர் கூறிய அளவில் அவனையே கணவனாக வரித்து விட்டாள். அருமறை தரல் வேண்டினாலும் உடனே தரக் கூடிய கற்புப் பெருமையையுடையவள் ஆகிவிட்டாள். அப்படிப்பட்டவள் பிறன் ஒருவனை மணக்க ஒரு போதும் துணியாள். மேலும் இம்மலையில் வாழ்பவர் அவள் காதலை அறியாது, நொதுமலர் வாழ்வுக்கு (stranger's life) ஈடுபடுத்துவார்களாயின் இனி மலைநாட்டிலே வள்ளியிலே கிழங்கு வீழாது; மலைமுகட்டில் தேன் கூடு கள் உண்டாகா; தினைக் கொல்லையிலும் கதிர்கள் வள மாகத் தோன்றா. மேலும் மலைநாட்டுப் பெண்கள் என்றும் பிழை செய்வதில்லை. கணவரைத் தொழுது எழும் அவர் தம் கற்புச் சிறப்பினால்தான் அவர் களின் அண்ணன்மாரும், தாம் குறி தப்பாது கணை செலுத்தும் ஆற்றலை உடையவராயிருக்கின்றனர்.'' இவ்வாறு கூறித் தோழி அறத்தோடு நின்றாள். வேற்று வரைவு (marriage with a stranger) நின்றது; தலைவி தன் மனத்தில் வரித்த கணவனையே நினைவில் கைப்பிடிக்கும் நிலையினைப் பெற்றாள்.

குறுந்தொகைப் பாடலொன்றில் தலைமகன் தமர் (உறவினர்) தலைவியை மணம் பேசுதற் பொருட்டு வந்தா ராக, ''அவருக்கு நமர் (kith and kin) உடன்படுவார் கொல்லோ?" என்று ஐயுற்ற தலைவியை நோக்கி, ''நமர் உடன்பட்டனர்'' என்று தோழி கூறும்பொழுது தலைவ னுக்கு உன்னை உரிமை செப்பினர் என்று குறிப்பிடு கின்றாள்.[178]

இத்தொடருக்கு விளக்கம் எழுதியுள்ள தமிழ்த்தாத்தா டார்க்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ''துறைவர்க்கு

178. ............துறைவர்க்கு
உரிமை செப்பினர் நமரே"—
குறுந்தொகை: 351: 4—5

உரிமையென்றது அவருக்கே தலைவி உரியளென்றபடி; ஓர் ஆடவனுக்கு உரிய பொருள்கள் யாவற்றினும் சிறந்தமை பற்றி மனைவிக்கு 'உரிமை' என்னும் பெயர் அமைந்தமை இங்கே கருதற்குரியது'' என்று குறிப்பிட்டுள்ளார்.[179] தலைவி வீடு சென்று தலைவியை மணம் பேசப் பெரியோரைத் தலைவன் விடுப்பது வழக்கம். இவ்வாறு பிரிந்திருக்கும் தலைவனையும் தலைவியையும் ஒன்றுபடுத்தும் பெரியோரைப் 'பிரிந்தோரைத் திருமணத்தில் சேர்ப்போர்' என்றனர்.[180]

தலைவி தலைவனுடன் உடன்போக்கு போனபின்பு அவர்களைப் பாலை நிலத்தில் தேடிச் சென்ற செவிலி, ''என் கால்கள் நடந்து நடந்து நடை ஓய்ந்தன; இணையாக எதிர் வருவாரைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் ஒளியை இழந்தன; இந்த உலகத்தில் நம் மகளும் அவள் தலைவனும் அல்லாத இவ்வுடன்போக்கில் ஈடுபட்டுள்ள பிறர் அகன்ற பெரிய வானத்திலுள்ள பெரிய மீன்களைக் காட்டிலும் பலராவர்'' என்று சொல்லுகின்றாள்.[181]

இதனால் களவொழுக்கமும் உடன்போக்கு நிகழ்ச்சியும் அந்நாளிற் பெருக வழங்கின எனலாம்.

மேலும் உடன்போக்கினை அறிவில் மேம்பட்ட ''முக்கோற்பகவர்' என்னும் அறிஞர்களே ஒப்புக்கொண்டு செவிலித் தாய்க்கு உலகியல் கூறித் தெருட்டிய செய்தியினைப் பாலைக்கலியில் காணலாம்.

உடன்போக்கு விரும்பித் தலைவனுடன் தலைவி பாலைவழியிலே சென்று விடுகின்றாள். செவிலித்தாய்

---

179. டாக்டர் உ. வே. சாமிநாதையர்;
குறுந்தொகை: 351 பாட்டு உரை.
180 குறுந்தொகை: 146.
181. குறுந்தொகை: 44.

அவளைத் தேடிப் போகிறாள். பாலை வழியில் இறைவன் மாட்டு நெஞ்சம் செலுத்தும் முக்கோற்பகவர் (திரிதண்டு சந்நியாசிகள்) எதிர்ப்படுகின்றனர். அவர்களைக் கண்டு செவிலித்தாய் ''அந்தணர்களே! என் மகள் ஒருத்தியும், இன்னொருத்தியின் மகன் ஒருவனும் தம்முள்ளே காதலாற் கலந்தவர், தாம் மட்டுமே அறியக் களவிலே கூடி மகிழ்ந்தவர், அத்தகையார் இருவரையும், எதிரில் வழியிடையே செல்லக் கண்டீர்களோ?'' என்று வினவுகின்றாள்.

இதற்கு அப்பெருமக்கள் பின்வருமாறு மறுமொழி தருகின்றனர்:

''பெருமாட்டியே! அவர்களை நாங்கள் காணாமல் இருக்கவில்லை. கண்டோம்: அழகிய இளைஞனுடன் அரிய தான பாலைவழியில் செல்லவும் துணிந்த சிறப்புமிக்க பெண்ணின் தாயே! நீர் இனி மன அமைதியோடு நும் வீடு நோக்கித் திரும்பிச் செல்வீராக!

''மணப்பொருள் பலவும் கூட்டிய நறிய சந்தனம், தம் உடலிலே பூசிக் கொள்பவர்க் கல்லாது, மலையிலே பிறந்தாலும், அம்மலைக்கு என்ன நன்மையைச் செய்யும்? நினைத்துப் பார்த்தால், உன் மகளும், உமக்கு அத்தகைய சந்தனம் போன்றவளே அல்லவோ!

''நீர் நிரம்பிய வெண்முத்துக்கள், கோத்து அணிப வர்க்குத் தானே பயனைத் தரும். அஃதன்றி, நீரினுள்ளே பிறந்தாலும், அந்நீருக்கு அவை என்ன பயனைச் செய்யும்? ஆழச் சிந்தித்தால், உம் மகளும் உமக்கு அம்முத்துக்கள் போன்றவளே அல்லவோ!

''ஏழு நரம்புகளிலே பிறக்கும் இனிய இசை யாழிலே தான் பிறக்கும். ஆயினும் இசைத்து அனுபவிப்பவருக்கு இன்பந் தருமேயல்லாது, பிறந்த யாழுக்கு அதனால் என்ன

பயன் ஏற்படும்? ஆராய்ந்தால் உம் மகளும் உமக்கு அத்தகையவளேயாவாள் அல்லவோ!

''ஆகவே, அவள் காதலனுடன் போனாள் எனக் கருதி வருந்துதல் வேண்டா. தேடிச் செல்லலும் வேண்டா. நும் மகள் தலைசிறந்த கற்பினள் ஆவள். அவளுக்கு எத்தகைய துன்பத்தையும் சூழாதீர்கள். சிறந்தவனான தன் காதலனோடு அவள் சென்றுவிட்டாள். அவள் கொண்ட முடிவே சிறிதும் அறநெறி தவறாத ஒழுக்கமும் ஆகும் என்று அறிவீராக.''

இவ்வாறு அச்சான்றோர் செவிலித் தாய்க்கு அறிவுறுத்தினர்.[182]

இந்தப் பாட்டு, சங்க காலச் சமுதாயத்தில் மகளிர் தத்தம் கணவரைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமையினைப் பெற்றிருந்தனர் என்பதனை உணர்த்தும். பிறந்த வீட்டுப் பாசத்தினும், புகுந்த இடத்தில் இல்லறக் கடமையினை மேற்கொள்ள வேண்டும், அதுவே அறநெறி, உலகியல்பு என்று நினைத்த தலைவியின் நிலையினை உணர்த்தும். தலைவியின் இச்செயலை அறிஞர் பின்வருமாறு துணிந்தறிவர். ''பெண்ணின் பெருந்தக்கதான கற்பினைப் பெற்றோரும், அயலவரும், முனிவர்களும் மதிப்புடன் போற்றிய பான்மை தெரியவரும். எத்தகைய துன்பம் இடைப்படினும் பெற்றோரையும் துறந்து, தன் நெஞ்சத்தைப் பிணித்தானுடன் கொடிய பாலையில் தலைவி செல்லும் அருஞ்செயல் பாராட்டப் பெறும். எனவே அகத்திணை இலக்கியங்களில் தலைவியே தலையாய பாத்திரமாக விளங்குகிறாள்; மற்றப் பாத்திரங்கள் அவளைச் சுற்றியே சுழல்கின்றனர். தலைவியும் தலைவியின் கற்புமே அகப்பொருள் இலக்கியங்களின் சாரப் பொருள்

182. பாலைக்கலி: 8.

களாக அமைந்துள்ளன'' என்பர். ("We have already seen how the parents, the neighbours, the sages and the hero bowed their heads in reverence to the noble quality of chastity. We have also seen that a girl after her association with a youth keeps her loyalty at all costs, even disregarding her parents and experiencing any amount of hardships. Therefore the main figure in Ahattinai around which all other figures revolve, and the chief quality to which all other qualities are attached are the heroine and her chastity".[183])

அடுத்து, அகத்திணைப் பாடல்களில் பெண்ணொருத்தியைத் திருமணத்தில் பெற அப்பெண்ணின் பெற்றோர்களுக்கு விலையாகப் பொருள் கொடுத்த செய்தியினைக் காணலாம்.

''சுற்றத்தார் வேண்டிய பொருளை நாட்டையே கொடுத்துத் தலைமகன் வரைவு (திருமணம்) மலிந்தான் என்று தோழி மகிழ்ச்சியுடன் தலைவிக்குக் கூறுகின்றாள் என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகின்றது.[184]

இதன் விளக்கவுரையில் ஐங்குறுநூற்றின் பழைய உரையாசிரியர், ''உலகை வழங்க வேண்டும் உள்ளத்தன் அஃதின்மையால் நாட்டை வழங்கினான் என்பதாம்'' என்று உரை கண்டுள்ளமையினை நோக்குக.

---

183. Dr. V. Sp. Manickam, The Tamil concept of Love: p. 318.

184. ''எக்கர் ஞாழன் மலரின் மகளிர்
ஒண்டழை யயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கினன் நாடே''
—ஐங்குறுநூறு: 147.

''எம் இனத்து ஆயர் முலைவிலை (ஐங்குறுநூற்றில் தழை விலை என்றது போல-அதாவது பரிசப் பொருள் என்பதாம்) கேட்க மாட்டார்கள். ஆனால் கொல் லேற்றுக் கொம்பினிடையினைத் தாம் காதலிக்கும் பெண் களின் முலையிடைப் போலக் கருதி ஆர்வமுடன் வீழ்ந்து தழுவினால், அவனையே தம் மகட்கேற்றவனாகக் கருது வார்கள் ஆயர்கள்'' என்ற குறிப்பும் பெண்ணின் அருமை யினை உணர்த்தும்.[185]

இதே போன்று அகநானூற்றிற் காணப்படும் இரண்டு பாடல்கள்[186] இச்செய்தியினை மேலும் வலியுறுத்துகின்றன.

நெய்தல் நிலப்பெண் ஒருத்தியைக் காதலித்துவரும் நெய்தல் நிலத் தலைவன் ஒருவன், ''அழகு மிகுந்த இத் தலைவி, நலம் மிகுந்த சிறந்த பொருள்களையெல்லாம் மரக்கலம் நிறையக் கொணர்ந்து முலைவிலையாக நாம் கொடுத்தாலுங்கூட, நம்மால் பெறுவதற்கு அவள் அரிய வளே'' என்று தன் நெஞ்சிற்குச் சொல்லிக் கொள்வதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.[187]

இவற்றால் நாம் அறிந்து கொள்வது என்று ஓர் அரிய கருத்து உளது. அதுவே சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில்

---

185. *முல்லைக்கலி: 3: 71–73*
''விலைவேண்டார்; எம்மினத்து ஆயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப்போலப் புகின்''

186. *அகநானூறு: 280; 390*

187. *அகநானூறு: 280: 4-6*
........ஆய்தொடிக் குறுமகள்
நலஞ்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறலருங் குரையள்''

மகளிர் ஒரு சொத்தாகக் (property) கருதப்பட்டமையினை அறியலாம். இற்றைநாட் சமுதாயம் ஆண்மகனுக்குப் பெண்ணைப் பெற்ற பெற்றோரிடமிருந்து விலையினைச் சீதனப் பொருள் (dowry) என்ற பெயரில் கேட்கும் கொடுமையினை நாம் நன்கு அறிவோம்.

பெண் ஒரு வீட்டிற்குத் திருமணம் முடித்து அடியெடுத்து வைத்தாள் என்றவுடன், ஒரு பசுவினால் வரும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவையுடைய செல்வச் சிறப்பில்லாத இல்வாழ்க்கை இனிய விழாவையுடைய மகிழ்ச்சி பொங்கும் வீடாயிற்று என்று அவள் இல்லற வாழ்க்கையினைக் காணும் சிலர் கூறும் அளவிற்கு நன்னிலையடைந்தது என்பதனைக் காண்கிறோம்.[188]

இக்காலத்திலும், ''ஏர் பிடித்தவன் என்ன செய்வான்; பானை பிடித்தவள் பாக்கியம்'' என்ற பழமொழி இதே கருத்தில் வழங்கக் காணலாம்.

இவ்வாறு மிகச் சிறந்த பரிசப் பொருளைத் தந்தாலும், தன் மகளுக்கு ஏற்ற கணவனாக அவன் அமையாவிடில் அவனுக்குத் தன் பெண்ணைத் திருமணத்தில் தர உடன்படுவதில்லை என்பதை அறிகிறோம்.[189]

திருமணத்திற்கு வேண்டிய பொருள் தேடித் தலைவன் பொருள் தேடச் செல்வதுண்டு. இதனை 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' என்பர். திருமணத்தில் ஓர் இளைஞன் ஒரு பெண்ணின் கை பற்றுதல் 'கொடை,

---

188. குறுந்தொகை: 295: 4-6

189. புறநானூறு: 343: 10-13

என அந்நாளில் வழங்கப்பட்டது.[190] இதனால் சங்ககால மகளிர் எத்துணைச் சிறப்புடன் போற்றப்பெற்றனர் என்பது தெளிவாகும்.

**அன்பின் ஐந்திணை**

சங்ககாலத் தலைமக்கள் அதாவது தலைவனும் தலைவியும் ஒருவர்மாட்டு ஒருவர் பெருங்காதல் கொண்டிருந்தார்கள். தலைவனிடத்துத் தான் கொண்ட ஆழ்ந்த காதலைத் தலைவி ஒருத்தி, நிலத்தினும் பெரிது என்றும் கடலினும் ஆழ்ந்தது என்றும், வானிலும் உயர்ந்தது என்றும் சொல்லிக் கொள்கிறாள்.[191]

''காதலர் தனக்கு இன்பம் நல்கவில்லையெனினும் அவரைப் பல முறை தான் பார்த்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகும்'' என்கிறாள் பிறிதொரு தலைவி.[192]

''அழாதே என்று நம் அழுத கண்களைத் துடைப்பவர் நம் தலைவர்'' என்கிறாள் மற்றொரு தலைவி.[193]

நீரில் நீந்தி வாழும் மகன்றில் எனும் உயிரினங்கள் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வனவாகும். நீரில் நீந்திச் செல்லும்பொழுது இடையில் ஒரு பூ குறுக்கிட்டு

---

190. (1) நற்றிணை: 393 'நமர்கொடை நேர்ந்தனர்'
(2) ஐங்குறுநூறு: 300: 2-3.
'பெருங்கல் வெற்பன்
வந்தனன் எதிர்ந்தனர் கொடையே'
(3) அகநானூறு: 282:13
'எந்தையும் எதிர்ந்தனன் கொடையே'

191. குறுந்தொகை: 3

192. குறுந்தொகை: 60

193. குறுந்தொகை: 82: 1-3

விட்டாலும், அவ் இடைநேரம் பலவாண்டுகள் ஆயினது போன்று துன்புறுமாம். அது போன்றே தலைவன் ஒரு சிறிது நீங்கினாலும் பொறுக்கமாட்டாது புலம்புகின்றாள் ஒரு தலைவி.[194]

தலைவன் பிரிய நினைக்கின்றபொழுது அவன் பிரிந்து தனியே செல்லும் காடு துன்பந் தருவதென்றால், தலைவனைப் பிரிந்து தனியே இருக்கும் தலைவிக்கு வீடு இனிமையாக இருக்குமோ? என்று குறிப்பிடுகின்றாள் தலைவி.[195]

''மனையில் வாழும் மகளிர்க்கு ஆடவரே உயிர்'' என்று குறிப்பிடுகின்றாள் தலைவி ஒருத்தி.[196]

''சிறிய பலாமரக் கொம்பிலே பெரிய பலாப்பழம் தொங்குவது போல, இவள்தன் சிற்றுயிர், தலைவன் மாட்டுக் கொண்ட பெருங்காதலைத் தாங்கி நிற்கின்றது'' என்று தோழி தலைவியின் காதலை எடுத்துரைக்கின்றாள்.[197]

இதற்கு ஒத்த நிலையிலேயேதான் தலைவன் தலைவியிடம் கொண்டிருக்கும் காதலும் அமைந்திருக்கக் காணலாம்.

''தலைவியின் நீர் போன்ற மென்மைச் சாயல் தீ போன்ற தன் வன்மையுரத்தைத் தணித்து விட்டது'' என்று தலைவன் ஒருவன் குறிப்பிடுகின்றான்.[198]

---

194. குறுந்தொகை: 57
195. ,, 124
196. ,, 135
197. ,, 18
198. ,, 95

''கடல் சூழ்ந்த மண்டிலத்தையே பெறுவதாக இருந்தாலுங்கூடத் தலைவியின் காதலை அதற்காக இழக்க ஆயத்தமாக இல்லை'' என்று தலைவன் ஒருவன் குறிப்பிடுகின்றான்.[199]

பிறிதொரு தலைவன் தலைவியோடு இனிது உறங்கும் நாட்களே பயனுடைய நாட்கள் என்றும், பிற நாட்கள் எல்லாம் பயனற்ற நாட்கள் (பதடிவைகல்) என்றும் குறிப்பிடுகின்றான்.[200]

''தலைவியோடு ஒரு நாள் சேர்ந்து மகிழ்ந்து வாழ்ந்தால் போதும்; அதன் பின்னர் அரைநாள் வாழ்க்கை கூடத் தான் வாழத் தேவையில்லை'' என்கிறான் பிறிதொரு தலைவன்.[201]

பட்டினப்பாலையில் இடம்பெறும் தலைவன் ''முட்டுப்பாடில்லாத (தடைபடாத) சிறப்பினையுடைய காவிரிப்பூம் பட்டினத்தையே பெறுவதாக இருந்தாலுங்கூடத் தன் நெஞ்சங் கவர்ந்த காதலியை விட்டு நீங்கி வரமாட்டேன்'' என்கிறான்.[202]

**தேயாத காதல்**

திருமண நாளின் போது தலைவன் தலைவியிடத்து எவ்வளவு அன்பு காட்டினானோ அதே போன்றே

---

199. குறுந்தொகை : 300: 7-8
200. ,, 323.
201. ,, 280: 4-5
202. பட்டினப்பாலை: 218-220.

தொடர்ந்து அன்பு செலுத்தி வருவதாகத் தலைவியொருத்தி குறிப்பிடுகின்றாள்.[203]

பிறிதொரு தலைவி, தலைவன் திருமணம் செய்து கொண்ட நாளைவிடவும் தற்பொழுது தன் மாட்டுப் பேரன்பு பூண்டொழுகுவதாகச் சொல்கிறாள்,[204]

இந்த இரு செய்திகளும் சங்க காலத் தலைவி உடல் கவர்ச்சியாலன்றி உள்ளப்பண்பு காரணமாகத் தலைவனால் என்றும் விரும்பப்பட்டாள் என்பதனை யுணர்த்தும். உடல் நாட்டம் குறைந்து, ஒருவர் உள்ளத்தையொருவர் புரிந்து கொண்டு, அவரவர்தம் மனப் பண்பாட்டினை படிப்படியே உயர்த்தி வாழும்பொழுதுதான் இல்வாழ்க்கை இனிமையும் செம்மையும் பெறுகின்றது.

### மனைக்கு விளக்கு

மனைவி மனைக்கு விளக்கு என்பதும், இல்லத்தை ஆள்வதனால் இல்லாள் என்பதும், மனைக்கு முதன்மை

---

203. (1) குறுந்தொகை: 385:6:
'அன்றையன்ன நட்பினன்'
(2) நற்றிணை: 332:8
'தலைநாள் அன்ன பேணலன்'
(3) அகநானூறு: 332:15
'தண்டாக் காதலும் தலைநாள் போன்மே'.
(4) குறிஞ்சிப்பாட்டு: 238.
'அன்றை யன்ன விருப்போடு'

204. அகநானூறு:
'பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே'

யுடையவள் என்பதனால் மனை முதல்வி என்பதும், வாழ்க்கைக்குத் துணையாக அமைதலின் 'வாழ்க்கைத் துணை' என்பதும் முன்னரே பெறப்பட்டன.

இதற்கு மாறாக ஆணிற்கு, இல்லான் என்ற சொல்லோ, மனைவன் என்ற சொல்லோ, மனை முதல்வன் என்ற சொல்லோ யாண்டும் வழங்கப்படவில்லை என்பது கருதத் தக்கதாகும்.

மேலும் வீட்டின் கடை என்ற சொல், வீட்டின் தலைவாசலைக் குறித்து நின்றது என்பதும் பெறப்படுகின்றது. ஏனெனில் வீட்டில் மகளிர் புழங்கும் (வாழும்) பகுதி பின் பகுதியேயாதலின் அவர்கள் பெரிதும் புழங்கும்சமையற்கட்டு முதலான வீட்டின் பின்பகுதிகள் வீட்டின் முதலிடமாகக் கருதப்பட்டு, ஆண்கள் புழங்கும் வீட்டின் முன் பகுதி பின் பக்க மிருந்து நோக்கக் கடையாக அமைதலின் கடையெனப் பட்டது.

இந்த என் கருத்திற்குரிய சான்றினைச் சிறுபாணாற்றுப் படையிற் காணலாம்.

பல நாள் உண்ண உணவின்றிப் பசியால் வாடும் பாணர் குடும்பத்தின் வறுமை நிலையைச் சித்திரித்துக் காட்டுகிறார் சிறுபாணாற்றுப்படை ஆசிரியர் நல்லூர் நத்தத்தனார்.

''விடியாத கண்ணையுடையவாகிய சிறுகுட்டிகளை ஈன்றணிமையுடைய (Just delivered) நாய், அக்குட்டிகள் தம் பாலில்லாத வறுமுலைகளைச் சுவைத்தலின் துன்பத்தைப் பொறுக்கமாட்டாது துடிக்கின்றன. மேற்கூரைகளை மூங்கிலோடு பிணித்திருக்கும் கயிறுகள் அறுந்து விழுந்துள்ளன. சமையற்கட்டில் உள்ள அடுப்பு, காளான் (fungus) பூத்து வழக்கற்றுத் தற்போது நாய் வாழும் இடமாக உளது. அதுபோது உடல்

ஒடுங்குவதற்குக் காரணமான பசியாலே வருந்தி மெலியும் நுண்ணிய இடுப்பினையும், வளையலை யணிந்த கையினையும் உடைய கிணைப்பறை கொட்டுவோனுடைய மனைவி, தன் நகத்தால் குப்பை மேட்டில் முளைத்திருக்கின்ற வேளைக் கீரையைப் பறித்துவந்து உப்பில்லாமல் சமைத்து வெந்த அக்கீரையினை, வறுமையுறுதலும் உலகில் இயல்பாக நிகழும் செயல் என்று அறியாது புறங்கூறித் திரிவோரால் தாம் காணப்படுதற்கு நாணப்பட்டுத் தம் வீட்டின் தலைவாசலையடைத்து, வறுமையால் வாடி நிற்கும் தங்களின் பெரிய சுற்றத்தினரோடு ஒன்றாக இருந்து கீரையுணவை உண்ணுகின்றார்கள்''[205]

இங்கே ''கடை அடைத்து'' என்பதற்குத் ''தலைவாசலையடைத்து'' என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரை என் கருத்திற்கு அரண் செய்வதாகும்.

**கற்பும் காரிகையும்**

சங்ககால மகளிரும் அவர்தம் கற்பும் ஒருங்கே பலவிடங்களிற் பாராட்டப்பட்டுள்ளதனைக் காணலாம்.

''கடவுள் கற்போடு, குடிக்கு விளக்காகிய பிள்ளையைப் பெற்ற புகழ் மிகுந்த சிறப்பையுடைய நல்லவள்'' றும்,[206]

''அடங்கிய கற்பும் ஒளிவிடும் நெற்றியும் உடைய பெண்'' என்றும்,[207]

ஆறிய கற்பும் அடங்கிய மென்மைப் பண்பும், ஊடற்காலத்திலும் (during the time of sulkiness) இனிய

205. சிறுபாணாற்றுப்படை; 130-139.
206. அகநானூறு; 181; 1-3
207. புறநானூறு; 249; 10-11

பண்பான சொற்களையே கூறும் இனிமையும், அமிர்தம் நிறைந்த செக்கச்சிவந்த வாயையும், அழகான பார்வையையும், ஒளிவிடும் நெற்றியையும், அசைந்த நடையையும் உடையவள்'' என்றும்[208] மகளிர் சங்க இலக்கியங்களிற் சிறப்பாகப் பேசப் பெற்றுள்ளனர்.

### மகளிரைக் குறிப்பிடும் சொற்கள்

மங்கல மகளிர்,[209] மனையோள்,[210] வெய்யோள்[211] வசையில் மகளிர்[212], மெல்லியன் மகளிர்[213] சேயிழை மகளிர்[214], வடமீன் தொழுதேத்தும் வயங்கிய கற்பினாள்[215] என்று பலவாறாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்றாள்.

### ஒரு தனிச் சிறப்பு

''பண்டைத் தமிழ் நூல்கள் போலப் பெண்ணுரிமையைப் போற்றிய நூல்கள் வேறு எம்மொழியிலும் இல்லை. மனைவிமீது ஐய்யுற்றதாகக் கூறுதலைக் கயமை என்று கருதினர் என்பதைத் தமிழ் கற்றோர் அறிவர். தமிழ் நூல்களில் அக்கயமை இடம் பெறவில்லை. ஆனால் பிற மொழி நூல்களில் அஃது இடம் பெறுகின்றது. ஆங்கில நூல்களிலும் அஃது உண்டு. தலைவி தலைவன் மீது ஐயுற்றதாகக் கூறுவனவே தமிழ் நூல்கள். அவ்வாறு கூறுவதால் உயர்வு பெண்பாலார்க்கேயன்றோ! அவரை நல்லார்

---

208. பதிற்றுப்பத்து; 2; 6: 10-13.
209. புறநானூறு; 332;5
210. ,, 333;8
211. ,, 222;2
212. பதிற்றுப்பத்து; 12;23
213. ,, 40;23
214. ,, 43;2
215. பாலைக்கலி; 1;21

என்றும் நிறையுடையார் என்றும் தமிழுலகங் கருதிற்று'' என்றுரைப்பர், அரிய கருத்துகளை யெல்லாம் எளிய நடையில் விளக்கவல்ல என் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள்.[216]

## ஊடல் விளக்கும் தலைவி உரிமை

இவர்தம் கூற்றை நன்கு விளக்குவன சங்க இலக்கியத்தில் மருதத்திணையமைந்த பாடல்கள் ஆகும்.

பரத்தையர்ப் பிரிந்துவந்த தலைமகனைப் பார்த்து தலைவி ஊடிச் (கோபித்து) சொல்லும் சொற்களில் பெண்ணுரிமை பிறங்குகின்றது எனலாம்.

(1) உங்களை, இங்கே வரும்படியாகச் சொன்னது யார்?''[217]

(2) ''எமக்கு நீ என்ன உறவு உடையவன்? நீயோ பெரியவன்! துயரால் ஆற்றாது துடிக்கும் நான் என்ன உன் அடியாளோ? என்னைவிட்டு விலகிப் போவாய்''[218]

(3) ''யாரிவன்? என் கூந்தலை வந்து பற்றுகின்றான்? இதுவும் ஓர் ஊராண்மைக்கு ஒப்பான கொடுமையுடையது தான்! என் வீட்டிற்குள் வாராதே! வந்தது போலவே திரும்பிப் போய்விடுவாயாக''[219]

---

216. கலித்தொகைச் சொற்பொழிவுகள்; ப; 63-64.

217. மருதக்கலி; 20; 30-31.
'தம்மை, வருகென்றார் யார்கொலோ ஈங்கு'

218. மருதக்கலி; 23; 3—4.
'தொடிய எமக்குநீ யாரை பெரியார்க்
கடியேரோ ஆற்றா தவர்'

219. மருதக்கலி; 24; 1-3.
'யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரல்நீ! வந்தாங்கே மாறு''

(4) "எம் வீட்டினுள்ளே நுழைபவனே! நீ யார்! அறிந்தேன். புதுமலர் தேரும் வண்டே போல நாள்தோறும் கலியாண கோலத்திலேயேதான் நீ விளங்குகிறாய்"[220]

இவண் (இங்கு) கூறிய-தலைவி எழுப்பிய கேள்விக் கணைகளில் பெண்ணின் உரிமை மனம் நன்கு கமழ்வதைக் காணலாம். வீட்டைப் பொறுத்த வரையில் அது தலைவி யினுடையதே யாகும். 'என்வீடு' என்று தலைவன் குறிப் பிடுவது இல்லை. தலைவி செம்மாப்புடன் 'எம்மனை' 'எம்இல்' என்று குறிப்பிட்டுக் கொள்கின்றாள். இத்தகைய உயர்நிலைக்குக் காரணம் மகளிருடைய நிறையும் துணிவும் கற்பு மேம்பாடுமேயாகும்.

இதனால்தான் இத்தகைய பண்பின் வழிவந்த குடியில் பிறத்தல் அரிது என்று கூறப்பட்டது,[221] எனவே, தலைவி

"ஆன்ற கற்பின் சான்ற பெரியள்"[222] என்றும் "வடமீன்போல் தொழுதேத்தும் வயங்கிய கற்பினாள்" என்றும்[223] போற்றப் பெற்றாள்.

**ஆணிற்கும் கற்பு மேம்பாடு:**

> **"கற்புநிலை என்று சொல்ல வந்தார்இரு**
> **கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்"**[224]

என்று பாரதியார் ஆணிற்கும் கற்பை வற்புறுத்தியுள்ளார்.

---

220. மருதக்கலி; 33;1–3
'யாரை நீ எம்இல் புகுதருவாய்? ஒரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல்—யாழ
வதுவை விழவணி வைகலும் காட்டினையாய்'

221. குறுந்தொகை; 45;5
222. அகநானூறு; 190;12.
223. பாலைக்கலி; 1; 21
224. பாரதியார் கவிதைகள்: பெண்கள் விடுதலைக்கும்மி

''சங்க காலத்தில் பெண்ணிற்கு மட்டுமே கற்பு வேண்டப்பட்டது; ஆணிற்கு வேண்டப்படவில்லை'' என்று சிலர் கூறக்கேட்கலாம். அவர்கள் சோழன் நலங்கிள்ளியின் புறநானூற்றுப் பாடலைக் கேட்காதவராவர்.

சோழன் நலங்கிள்ளி வஞ்சினம் உரைக்கின்றார். ''என்னைப் பணிந்து வேண்டுவாரானால் என் அரசு மட்டுமின்றி என் உயிரையே கேட்பினும் தருவேன். ஆனால் என் உள்ளத்தை அறிவில்லாது இகழ்ந்தவன், தூங்கும் புலியை இடறிய குருடனைப் போல உயிர் பிழைத்துப் போதல் அரிதாகும். யானையின் காலடியிலே பட்ட மூங்கில் முளையைப் போல, என்னை எதிர்க்கும் பகைவரை அவர் ஊர் வரை சென்று ஒழிப்பேன். ஒழியேனாயின், காதலற்ற பொது மகளிர் தழுவ, என் மாலை துவள்வதாக!''[225] (என் தேவியும் என்னை ஒதுக்குவாளாக என்பது இவண் கருத்தாகும்.)

அரசனாக விளங்கிய சோழன் நலங்கிள்ளியே இவ்வாறு ஆண்கற்புப் பற்றி எண்ணியிருப்பானேயாகில் எளிய ஆண்மகனின் எண்ணம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதனை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

அடுத்து, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினத்தைக் காண்போம்:

''சிங்கம் போலச் சீறிவரும் அடங்காத மனமுடைய பகைவரை அவர் தோற்றோட வென்று நிற்பேன். அவ்வாறு வெல்லேனாயின், என் சிறந்த மனைவியான இவளைப் பிரிவேனாக''[226] என்று குறிப்பிடுகின்றான்.

---

225. புறநானூறு: 73. 13-14

226. புறநானூறு; 71; 1—6.

தன் தேவியாம் பெருங்கோப்பெண்டு என்பாளைத் தன் அருகிலேயே வைத்துக் கொண்டு இவ்வாறு ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினம் மொழிகின்றான். அவள்மாட்டு இவன் பேரன்பு கொண்டவனாக இருந்ததனால்தான், இவன் இறந்தவுடனே அவளும் கைம்மை நோன்புகொண்டு இவ்வுலகில் வாழ ஒருப்படாமல், அவனுடைய ஈமத் தீயில் பாய்ந்து உயிர்விட்டாள்.[227] இச்செய்தியினை முன்பே நாம் கண்டோம்.

ஒருவர்மாட்டு ஒருவர் பெருங்காதல் கொண்ட நிலையினை இந்நிகழ்ச்சிகள் தெரிவிக்கும்.

**அஃறிணையுயிர்களுங் காட்டிய ஆருயிர் அன்பு**

மேலும் குறுந்தொகைப் பாடலொன்றில், அஃறிணை (irrational being) உயிர்களில் ஒன்றாகிய குரங்குமாட்டும் இருந்த காதலின் வன்மை வெளிப்படுகின்றது.

இரவுக் குறி (night tryst) வந்து செல்லும் தலைமகனை இரவு வந்து தலைவியைச் சந்திக்க வேண்டாமென்று கூறித் தடுத்து, விரைவில் தலைவன் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தோழி வற்புறுத்துகின்றாள். அதுபொழுது பின்வருமாறு கூறுகின்றாள்;

''கரிய கண்ணையும் தாவுதலையும் உடைய ஆண் குரங்கு இறந்துபட, அதனால் ஏற்பட்ட கைம்மைத் துன்பத்தினைப் பொறுத்துக் கொள்ள மாட்டாத அழகிய பெண் குரங்கானது, மரமேறுதல் முதலிய தம் தொழிலைக் கல்லாத வலிய குட்டியைத் தன் சுற்றத்தினரிடம் கையடையாக (அடைக்கலம்) ஒப்படைத்துவிட்டு உயர்ந்த மலையில் ஏறிக் கீழ்ப்பாய்ந்து தன் உயிரினை மாய்த்துக் கொள்ளும்: அத்தகைய மலைச்சாரலையுடைய நாட்டுக்குத் தலைவனே:

---

227. புறநானூறு; 246

நள்ளிரவில் வாராதே: அன்வாறு நீ வரின் உனக்கு வழியில் தீங்குகள் உண்டாகுமென்று எண்ணி நாங்கள் வருந்துவோம்: நீ தீங்கின்றி வாழ்வாயாக'' என்று குறிப்பிடுகின்றாள்.[228]

இதனால் அஃறிணை உயிர்களிடத்தும் விளங்கிய கற்பு நிலை தெரிய வருகின்றது. அவ்வாறாயின் மகளிர் கற்பு நிலை பற்றி மேலும் விளக்கவும் வேண்டுங்கொல்?

**பிறனில் விழையாமை**

அடுத்து, பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடுங் கபிலர், ''மார்பு மகளிர்க் கல்லது மலர்ப்பு அறியலை'' என்கின்றார்[229] இதன் பொருள் ''மனைவிக்கு மட்டுமே இன்பம் தருதற்குத் தன் மார்பினை விரித்துக் காட்டுவதன்றிப் பிற பகைவர்க்குக் காட்டுவதில்லை'' என்பதாகும்.

இத்தகைய ஆண்கற்பினைப் பிறர்மனைவியை நோக்காத பேராண்மைப் பண்பு என்பர் திருவள்ளுவர். பிறன் மனைவியை விரும்பாத தன்மையினைப் பெரிய ஒழுக்கமாகப் போற்றுவர் திருவள்ளுவர்; அறத்தொடு கூடிய பண்பு என்றும் அதனைக் குறிப்பர்.[230]

அறநெறி நின்று அறமல்லாதவைகளைச் செய்தாலும் பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமலும் வாழ்தல் நல்லது என்றுங் கூறுவர்.[231]

எனவே இவ்வொழுக்கப் பண்பிற்கியையபவே இவ்விரு அரசர்களும் சங்க காலத்தில் வாழ்ந்து காட்டினர் என

228. குறுந்தொகை; 69.
229. பதிற்றுப்பத்து; 7:3;4–5
230. திருக்குறள்; 148
231. திருக்குறள்; 78

எண்ண வேண்டியுள்ளது. மாறாக, பேகன் என்னும் வள்ளல் ஒருவன், தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து தவறான வாழ்க்கையினை மேற்கொண்டொழுகியமை அக்காலச் சான்றோர்களான கபிலர்,[232] பரணர்[233] அரசில் கிழார்,[234] பெருங் குன்றூர் கிழார்[235] முதலியவர்களால் கடியப்பட்டுள்ளது.

## கிழவன் பணிவும் கிழவி உயர்வும்

கற்புக் காலத்தில் தலைவிக்குரியநேரார் மரபினைக் கூறும் தொல்காப்பியனார் தலைமகள் உயர்வும், தலைமகன் தாழ்வும் ஆராயுங்காலத்துப் புலவிக் (ஊடல்) காலத்து உரியன என்று குறிப்பிட்டுள்ளார்:

**மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய[236]**

தலைவனோடு ஊடுகின்றாள் தலைவி. அவளைச் சமாதானப்படுத்த முயல்கின்றான் தலைவன். தலைவி கூறுகின்றாள்; வேலை கெட்டு என்னிடம் பொய் பேசிக் கொண்டிருக்க வேண்டா: 'நின்மாயப் பேச்சுக்கு மயங்குபவர் எவரேனும் இருப்பாரானால், அவரிடம் போய்ச் சொல்லிக்கொள்' என்கிறாள். தலைவன் கூறுகிறான்; 'பெண்ணே: உன் அருள் பார்வை என்மேல் பட்டாலன்றி, யான் உயிர் வாழேன்' என்கிறான்.[237]

---

232. புறநானூறு; 143
233. ,, ; 144, 145
234. ,, ; 146
235. ,, ; 147.
236. தொல்; பொருளியல்; 31.
237. மருதக்கலி; 23.

இந்தச் சுவையான பகுதியால் தவறுக்கு ஆளாகின்றவன் ஆண்மகனே என்பதும், பெண் மகள் ஆளாவதில்லை என்பதும், எனவே புலவிக் காலத்து அவன் மனைவியிடம் பணிந்துபோவான் என்பதும் பெறப்படும். சில சமயங்களில் மனைவியின் காலில் தலைவன் விழுந்து விடுவதாகவும், அப்போது அத்தலைவி 'இது நன்றன்று. என் தங்கையர் (பரத்தையர்) இக்காட்சியைக் கண்டால் நல்லதில்லை' என்பாள் என்றெல்லாம் பிற்கால இலக்கியங்கள் பேசும்.[238]

காதற்பரத்தை கூற்றாக வரும் குறுந்தொகைப் பாடலொன்றில், தலைவன் தன்னிடத்தில் வயப்பட்டான் போல இருந்துவிட்டு, தற்போது தலைவிபாற் சென்று அவளுக்கு அடங்கி, கையையும் காலையும் தூக்கும் கண்ணாடிப்பாவை போன்று நடந்து கொள்கின்றான் என்று குறிப்பிடு கின்றாள்.[239]

இதனாலும் தலைவி மாட்டுத் தலைவன் கட்டுப்பட்டு நடக்கும் திறம் அறியப்படும்.

**அஞ்சவந்த உரிமை**

தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவி மாட்டு உளதாகிய கற்பாகிய உரிமை என்று தொல்காப்பி யனார் குறிப்பிடுவார்.[240]

இல்லறம் நடத்தும் பண்பு, பிறர்க்குக் கொடுக்குந்திறம், கற்பு மேம்பாடு விளங்குந் திறம் என்று மூன்று வகை நிலை களைக் குறிப்பர் நச்சினார்க்கினியர்.

---

238. தஞ்சைவாணன் கோவை; 398

239. குறுந்தொகை; 8

240. தொல்; கற்பியல்; 5 4
'அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்'

போர்க்களத்திற்குத் தம் மனைவியரை அழைத்துச் செல்லும் வழக்கம் தலைவர்க்கு இருந்ததில்லை என்கிறார் தொல்காப்பியனார்.

**எண்ணரும் பாசறை பெண்ணொடும் புணரார்[241]**

கொடிதாகிய வாடை வருத்தவும் தன் வினையில் மேம் பட்டிருந்தான் பாண்டியன் என்பது நெடுநல்வாடை உணர்த்தும் செய்தியாகும்.

மேலும் போர் தொடங்குவதற்கு முன் பகைவர் நாட் டில் ஓர் அறிவிப்புச் செய்யப்படுமாம். அதாவது பசுக்கூட் டம், பசுவியல்புடைய அந்தணர் பெண்டிர், நோயாளர், மக்கட் பேறு பெறாதோர் முதலியோர் போர் தொடங்கு முன் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட வேண்டு மென்று அறிவிப்புச் செய்வது அறத்தொடு கூடிய குறிக்கோ ளாகும்.

இவ்வாறு நெட்டிமையார் என்னும் பெண்பாற் புலவர் கூறுவர்.[242]

அங்கியங் கடவுள் (God of fire) மதுரையை எரி யுண்ணக் கண்ணகியால் ஏவப்பட்டவுடன், யார் யாரைத் தான் பற்றுவது, யாரை விடுவது என்று கேட்ட பொழுது, கண்ணகி பார்ப்பார், அறவோர், பத்தினிப்பெண்டிர், மூத் தோர்,குழவி என்னும் இவர்களை விடுத்துத் தீமை புரிவோர் பக்கமே தீ சேர்வதாக என்று கூறியமை ஈண்டு ஒப்பு நோக்கி யுணரற்பாலது.[243]

---

241. தொல்; கற்பியல்;131

242. புறநானூறு;9;1–6

243. சிலம்பு; வஞ்சினமாலை; 53-56.

**பெண்கொலை புரிந்த நன்னன்**

பெண்கொலை செய்தல் பெரும்பாவம் எனக் கருதப் பட்டது, பின்வரும் செய்தியால் அறியப்பெறும்.

நீராடும் பொருட்டுச் சென்ற பெண் ஒருத்தி, அந்த அருவி நீர் கொணர்ந்த பசிய மாங்காயைத் தின்றதாகிய குற்றத்திற்காக, எண்பத்தொரு ஆண் யானைகளோடு அவளது எடைக்கு எடை பொன்னாற் செய்த பாவையைக் கொடுப்பவும் ஏற்றுக் கொள்ளாதவனாய், அப்பெண்ணைக் கொலை செய்துவிட்டான் நன்னன். எனவே நன்னன் நீங்க முடியாத நரகத்தின்கண் சென்று துன்புற்றான் என, வரலாற்றுச் செய்திகளைத் தம் பாடலகளுள் அமைப்பதில் வல்ல பரணர் பாடியுள்ளார்.[244]

புறநானூற்றுப் பழைய உரைகாரரும் (old commentator) "நன்னன் பெண்கொலை செய்த குற்றத்தால் அவனது குலத்தில் பிறந்தார், சான்றோரால் வரையப்படுதற்குக் (நீக்கப்பட்டதற்கு) காரணமாவர்" என்று எழுதியுள்ளமையும் ஈண்டுக் கருதத்தக்கதாம்.[245]

கோசர் என்னும் வாய்மைக்குப் பேர்போன அறிவுக் கூட்டத்தார் சங்க காலத்தே தமிழகத்தே வாழ்ந்த சான்றோர் ஆவர். நன்னன் பெண்கொலை புரிந்த அடாத செயல் அற நாட்டங் கொண்ட அவர்களுக்கு ஆறாச்சினமும் துன்பமும் தந்திருக்க வேண்டும்.

ஏனெனில் பரணர் பாடிய பிறிதொரு குறுந்தொகைப் பாடலில், "நன்னனது காவல் மரமாகிய (totem tree) நறுமணங் கமழும் மாமரத்தை வெட்டி, அவனது நாட்டி

---

244. குறுந்தொகை; 293;1-6.

245. புறநானூறு: 151 உரை.

னுட் சென்று வெற்றி கொண்ட வஞ்சினத்தையுடைய கோசரைப் போன்ற வன்கண்மை (அச்சம்) யுடைய ஆராய்ச்சியும் வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[246]

எனவே பெண்கொலை செய்வது சங்ககாலத்தில் நரகத்திற்குச் செல்லுமளவிற்குப் பாவச் செயலாகவும் சான்றோர்கள் கடிந்தொதுக்குவதற்குரிய பழிச் செயலாகவும், பிறர் படையெடுத்துத் தண்டித்து அழித்தற்குரிய செயலாகவும்ஒருங்கே கருதப்பட்டது என்பது தெரியவருகிறது.

**பெண் மடலேறாமை**

எத்துணைத் துன்பம் வந்த போதிலும் பெண் மடலேறுவது என்னும் வழக்கம் கிடையாது என்று தெளிவுறுத்தியுள்ளார் தொல்காப்பியனார்.[247]

இந்நிலை பெண்ணின் மனவடக்கத்தினை விளக்குவதாகும்.

ஆண்கள் மடலேறுவேன் என்று கூறும் பாடல்கள் சில, சங்க இலக்கியத்தில் உண்டு. ஆனால் மகளிர் மடலேறுவேன் என்று சொன்னதாகவோ, அன்றி மடலேறி இறந்துபட்டதாகவோ ஒரு பாடல்தானும் இடம் பெறாமை கருதற்பாலது.

**முந்நீர் வழக்கம்**

தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு, கடலிற் கலமேறிப் பொருளீட்டச் செல்லுகின்ற வழக்கம் கிடையாதென்கிறார் தொல்காப்பியனார்.[248]

---

246. குறுந்தொகை: 73.

247. தொல்: அகத்திணையியல்: 35.
''எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான''

248. தொல்: அகத்திணையியல்: 34

இவ்வழக்கமும் தலைவி அயல் நாட்டில் துன்பம் உறக் கூடாது என்று தலைவன் நினைத்த அருள் நெஞ்சத்தினைப் பிரதிபலிப்பதாகும்.

**மக்கட்பேறு**

''மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர், நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலன் என்றும் கூறுவர்'' என்பது வள்ளுவர் வாய்மொழி.[249]

மனைக்கு விளக்கம் பெண்; பெண்ணிற்கு விளக்கம் அவள் பெறும் மக்களாவர்.

'கடவுட் கற்பொடு விளங்கும் குடும்பத்திற்கு விளக்காகிய மகனைப் பெற்றெடுத்த புகழ் மிகுந்த சிறப்பினையுடைய நல்ல மனைவி' என்று தாய்மையைப் பாராட்டுவர் இளநாகனார் என்னும் புலவர்.[250] கற்பொடு பொருந்திப் பிள்ளைகளைப் பெறும் தாயரை வாழ்த்துகிறார் ஆலங்குடி வங்கனார்.[251]

மருதத்திணைப் பாடல்களில் தலைவனையும் தலைவியையும் சேர்க்கும் வாயிலாக அமைபவன் பெரும்பாலும் மகனேயாவன்?

பகலெல்லாம் பரத்தைவீடு தங்கிவிட்டுத் தலைவன் வீடு திரும்புகிறான். தலைவி கோபித்தபொழுது மறுமொழி ஒன்றும் உரையாமல், தன் மகனைத் தழுவிக் கொண்டு அவன் பக்கத்தில் படுத்து உறங்குவது போல் கிடப்பான் தலைவன். மகனிடம் நெருங்காதே, இங்கே

249. திருக்குறள்: 60.
250. அகநானூறு: 184.
251. நற்றிணை : 330.

எதிர் நில்லாதே என்று தலைவி கூறும்பொழுது, 'என் தந்தை பெயரைக் கொண்டவனை நான் அணைத்துக் கொள்வேன்? உனக்கென்ன?' என்று கூறிவிட்டுக் கன்று இருக்குமிடம் செல்லும் பசுப் போல மகனிருக்குமிடம் பாய்ந்து செல்வான் தலைவன்''.[252]

இவ்வாறு மருதக்கலியில் ஒரு காட்சி இடம் பெறுகின்றது.

புதியதாகத் திருமணம் செய்து கொள்ளச் செல்லும் தலைவனைத் தடுத்து நிறுத்திய குழந்தையொன்றைப் பற்றிய செய்தி அகப்பாடலொன்றில் பேசப்படுகின்றது.[253]

எனவே இத்தகு மகனைப் பெற்ற மகளிர்தம் சிறப்புச் சொல்லவும் வேண்டுங்கொல்?

**மகளிர் கூத்தும் விளையாட்டும்**

'மகளிர் துணங்கை நாளும் வந்தன'[254] என்று கூறி மகளிர் தம்முன் தழுவி ஆடுகின்ற துணங்கைக் கூத்தை நிகழ்த்துவது பண்டைய வழக்கமாகும்.[255] அது பொழுது அவர்கள் விரும்பும் ஆடவர் அவர்க்கு முதற் கை கொடுத்தல் மரபு.[256]

திருமணத்திற்கு முன் தோழியரோடும், திருமணத்திற்குப்பின் தம் தலைவியரோடும் புனலாடச் (swimming) செல்வது என்பது வழக்கம்.[257]

---

252. கலித்தொகை: 86.
253. அகநானூறு: 66.
254. ,, : 336:16.
255. குறுந்தொகை: 31;2
256. கலி: 73: 16-7: புறநானூறு:24: 8-9.
257. பெரும்பாணாற்றுப்படை: 387-8

இவ்வாறு சுதந்திரமாக மகளிர் இளம் வயதில் நீராடச் சென்ற நிகழ்ச்சி அவர்தம் சுதந்திர நிலையினை விளக்கும் என்பர்.[258]

நல்ல கணவனைப் பெற வேண்டித் தைத் திங்களில் காலையெழுந்து நீராடி நோன்பு நோற்பது மகளிர் வழக்கமாகும்.[259]

மகளிர் தம் கணவரோடும் குழந்தையோடும் கை கோத்துக்கொண்டு திருப்பரங்குன்றம் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வந்தார்கள் என்பது மதுரைக்காஞ்சியில் நாம் காணும் குறிப்பு. சங்க கால மகளிர் பொது விடங்களில் தாராளமாகப் (fneely) பழகிய பான்மையினை (நிலையினை) உணர்த்தும்.[260] இது போன்றே திருமாலிருஞ்சோலை மலைக்குக் கணவனும் மனைவியும் பெற்றோரும் குழந்தைகளும் உறவினரும் ஒன்றுகூடித் திருமாலை லழிபடச் செல்லும் செயலும் பரிபாடலிற் கூறப்பெறும்.[261]

**பெண் பெற்ற சிறப்பு**

குன்றுறையும் தெய்வத்தை வணங்கிக் குன்றக் குறவன் (hunter of the hillock) பெண் மகவைப் பெற்ற செய்தியும்,[262] பிசிராந்தையார் தமக்கு முதுமையிலும் நரை தோன்றாததற்குக் காரணம், தமக்கு அமைந்த சிறப்பிற்குரிய

---

258. We may infer that women of the period had a free social life, and enjoyed themselves sporting in the river" J. V. Chelliah-Pattupattu Translation, p.46

259. கலித்தொகை: 59

260. மதுரைக்காஞ்சி: 460-467.

261. பரிபாடல்:15: 46-48.

262. ஐங்குறுநூறு: 257.

மனைவியே என்று குறிப்பிட்டிருக்கும் செய்தியும் சங்ககால மகளிர், சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தினை உணர்த்துவனவாம்.[295]

## மகளிர் கல்விப் புலமை

ஐம்பது மகளிர்க்கு மேல் சிறந்த புலமை பெற்று நாநலம் வாய்ந்த புலவர்களாக விளங்கியிருக்கிறார்கள் என்பது சங்க இலக்கியப் புலவர் அட்டவணை (Table) யைப் பார்த்தே நன்கு அறிந்து கொள்ளலாம். இது, சங்க கால மகளிரின் கல்வி பற்றிய தகுதியினை எடுத்து மொழிவதாகும். அதியமான் தான் அரிதிற் பெற்ற நெடுநாள் வாழவைக்கும் நெல்லிக்கனியை ஔவையாருக்கு வழங்கியதிலிருந்து பெண்பாற் புலவரை அக்கால அரசர்கள் போற்றிய திறம் உணரப்படும்.[296] தொண்டைமானிடம் அதியமான் சார்பில் தூது சென்று ஔவையார் அரசர் இருவர்க்கிடையே போர் மூளாத வண்ணம் செய்த அருள் தொண்டு பெரிதும் பாராட்டப்படும்.[297]

## பெண்வழிச் சேறல்

இனிப் பெண்வழிச் சேறலைப் பற்றி இவண் ஒரு சிறிது கூறவேண்டுவது அவசியம்.

"தன்வழி ஒழுகற்பாலள் ஆகிய மனைவி வழித் தான் ஒழுகுதல்" என்பர் பரிமேலழகர்.[298]

"ஆணிற்குக் குடும்பக் கடமையும் உண்டு; பொதுக் கடமையும் உண்டு. திருவள்ளுவரின் காமத்துப்பாலில்

---

295. புறநானூறு: 191: 'மாண்டவென் மனைவி'
296. ,, : 91
297. ,, : 95.
298. திருக்குறள் : பெண்வழிச் சேறல்-அதிகார விளக்கம்: பரிமேலழகர் உரை.

காதலியாகவும் அறத்துப் பாலில் வாழ்க்கைத் துணைவியாகவும் இருக்கும் பெண், பொருட்பாலில் கணவன் ஆற்றும் பொதுக்கடமைகளுக்கு இடையூறாக நிற்காமல் உதவி அளிப்பவளாக இருக்க வேண்டும்; பொருட்பாலில் பொது வாழ்விற்கு இடையூறாக நிற்கும்போதுதான் கடிந்து கூறுகின்றார்.; அப்போதும் பெண்ணைக் கடிந்து கூறவில்லை; பெண்ணைத் திருத்த முடியாமல் அவள் விரும்பிய வழியில் நடக்கும் ஆணையே கடிகின்றார்; பொதுக் கடமைகளுக்கு இடையூறாகும் காரணம் பற்றியே கடிகின்றார்; திருவள்ளுவர் ஆணிற்கும் பெண்ணிற்கும் ஒத்த உரிமை நல்கும் சான்றோர் ஆவர்; ''ஆணுக்குப் பெண் அடங்கும் பெண்ணடிமைத் தன்மை, குடும்ப முன்னேற்றத்தைக் குலைக்க வல்லது; அது போலவே பெண்ணுக்கு ஆண் அடங்கி நடக்கும் ஆணடிமைத் தன்மையும் பொதுவாழ்க்கையைக் கெடுக்க வல்லது'' முதலான விளக்கங்களை டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இப்பொருள் பற்றித் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[299]

**பெண் நிலை தாழ்ச்சியுறல்**

எனவே, சங்ககால இறுதியில் கடமையையே உயிராக எண்ணிய கணவனும், கணவனையே உயிராக எண்ணிய மனைவியும் ஒரு சிறிது அந்நிலையினின்று நெகிழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிற் காணப்பெறும் சில குறிப்புகள் இவ்வாறு நம்மை நினைக்கத் தூண்டுகின்றன.

ஏனெனில் இன்னா நாற்பதில், 'பெரிய மென்மை வாய்ந்த மூங்கிலை யொத்த தோள்களையும், தளிரை யொத்த மென்மையினையுமுடைய மகளிரை நஞ்சென்று

---

299. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்: ப. 206-210.

நினைத்தல் இனிது' என்ற கருத்து இடம்பெற்று விட்டது.[300]

கற்புடைய மனைவியைக் கோலாற் புடைத்தலைப் பற்றிய செய்தி கூறப்படுகின்றது [301]

இக்காலத்தே மகளிற் பண்பும் சரிவு கண்டுவிட்டது என ஓரளவு அறிய முடிகின்றது.

காரணம், கணவனை எதிர்த்து நிற்கும் மனைவி,[302] பிறரொடு வழக்குத் தொடுத்து மன்றம் ஏறும் பெண்,[303] திரிகடுகப் பாடல்களில் இடம் பெறுவதோடு, மனைவிக்குப் பயந்து வாழும் எருது போன்ற ஆணும் இடம் பெறக் காணலாம்.[304]

இந்தப் பெண்ணின் வீழ்ச்சிக்குத் தென்னிந்தியாவில் கி. பி ஐந்து, ஏழாம் நூற்றாண்டுகளில் சமண, பௌத்த

---

300. இன்னா நாற்பது: 37-3-4.
''தடமென் பணைத்தோள் தளிரிய லாரை
விடமென் றுணர்தல் இனிது''

301. திரிகடுகம்: 3.
'காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்'

302. திரிகடுகம்: 67.
'எதிர்நிற்கும் பெண்ணும்'

303. திரிகடுகம்: 71.
'.........பெண்டிர்
தொடுத்தாண் டவைப்போர் புகலும்'

304. திரிகடுகம்: 78.
.........கொண்டிருந்தும்
இல்லஞ்சி வாழும் எருது.

சமயங்களின் வளர்ச்சியே காரணம் ஆகுமென்றும், மோட்சம் பெறுவதற்கு மகளிர் தடையாவர் என இச்சமய குரவர்கள் நினைத்தமையே பெண், சமுதாயத்தில் பின்னாளில் தாழ்ச்சியாக மதிக்கப்பெற்றதற்குக் காரணம் என்பர்.[305]

இந்தச் சான்றுகள் கொண்டும் சங்ககாலத்தில் பெண்மை நலமும் உரிமைச் சிறப்பும் நன்கு போற்றப்பட்டன என்பதனையும், பின்னாளில் அந்நிலை சற்று வழுவியது என்பதனையும் நன்கு அறியலாம்.

## பெண்ணால் ஆண் பெற்ற பெருமிதம்

சங்க கால இலக்கியங்களில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தி இடம் பெறுவதனை யான் முடிவுரை கூறப்புகுமுன் குறிப்பிட வேண்டுவது அவசியம். அதாவது ஆண்மகன் ஒருவனைக் குறிப்பிட வரும் புலவர்கள், இவன் இன்ன நல்ல பெண்ணின் கணவன் என்று பாராட்டப்படும் தனிச்சிறப்பினைக் காணலாம்.

பதிற்றுப்பத்தில் மன்னனை வாழ்த்தும்பொழுது 'நல்லோள் கணவன்' என்றும்,[306] 'புரையோள் கணவ'[307] என்றும், 'சேயிழை கணவ'[308] என்றும், 'ஒண்டொடி கணவ'[309] என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தலைவியிடத்தில் தலைவன் ஒருவன் கொண்ட காதலை நிறைவேற்றித் தரத் தோழி ஒருத்தி மறுக்கிறாள். அது

---

305. Dr. K.K. Pillai, The Social History of the Tamils part I, pp. 390-397.

306. பதிற்றுப்பத்து: 6: 1: 3-4.

307. ,, : 7: 10: 14-16.

308. ,, : 8: 28, 26-36.

309. ,, : 9: 10: 46-50.

பொழுது தலைவன் 'என்னைக் காதல் நோயால் துன்புறுத்தியவள் இன்னாள் என்பதை யாவரும் அறிந்து கூறும்படி யான் மடல்மாவூர்ந்து மறுகிற் (தெருவிற்) செல்வேன்' என்று குறிப்பிடுகின்றான்.

தலைவன் தன்னுடைய உருவத்தையும், தலைவியினது உருவத்தையும் எழுதியமைத்த படத்தைக் கையிலேந்தி மடன்மாவிலேறி மறுகிற் செல்வானாதலின், அந்நிலையில் இன்னாள் கணவன் இவன் என்று ஊரினர் அறிந்து கொள்வர் என்பதாம்.

**நல்லோள் கணவன் இவன்எனப்**
**பல்லோர் கூறயாம் நாணுகஞ் சிறிதே.**[310]

இங்கும் இன்ன நல்ல பெண்ணின் கணவன் எனக் காண்போரால் தான் உரைக்கப்படுதலைத் தலைவன் பெரிதும் விரும்பினான் என்பது போதரும்.

இந்தப் பழக்கத்தின் - மகளிரின் தனிச்சிறப்பின் காரணமாகவோ என்னவோ திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானைக் குறிப்பிட வரும் நக்கீரர், 'குற்றமற்ற கற்புடைய தெய்வயானையின் கணவன் இவன்,[111] என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையே மறவாது திருஞானசம்பந்தர் திருமறைக் காடு தேவாரத்தில் சிவபெருமானைக் குறிக்க வருகின்ற பொழுது', வள்ளியின் கணவனாகிய முருகனுக்குத் தந்தை இவர்' என்று குறிப்பிட்டிருப்பதனைக் காணலாம்.[312]

---

310. குறுந்தொகை: 14: 5-6.
311. திருமுருகாற்றுப்படை: 5.
'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'
312. திருஞானசம்பந்தர் தேவாரம்: திருமறைழ காட்டுப்பதிகம்
''நம் செந்தில் மேய,
வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்''

**முடிவுரை:**

இல்லற வாழ்க்கைக்கு வேண்டிய தலைவனைத் தானே நாடித் தேர்ந்தெடுக்கும் உரிமையினை முற்றிலும் சங்ககாலப் பெண் பெற்றிருந்தாள் என அறிகிறோம். சங்க இலக்கியத்தில் காணுந் தமிழ்மகள் பொருளியலில் மிக்க உரிமை பெற்றிருந்தாள் என்பதனைக் கண்டோம். மனை முதலாக, தலைவியாக, இல்லத்தைக் கட்டிக்காத்து ஆள்பவளாக அவளைக் கண்டோம்.

ஓரோ வழி பரத்தையரை நாடிச் சென்ற தலைவனும், தலைவிமாட்டுத் தான் கொண்ட காதல் உண்மையுடையது ஆதலின், மீண்டும் தலைவி வாழும் வீட்டிற்கு வருகிறான். தலைவி அவன்பால் ஊடிப்பேசும் பேச்சுகளில் அவளின் மனையுரிமை நன்கு விளக்கமுறும். தன் குறையை அறியும் தலைவனும் "என்பால் குற்றம் உளதானால் நீ என்னைச் சினந்து கொள்வதற்கு உரிமையுண்டு" என்று மொழிகின்றான்; தன் குற்றத்தை உணர்ந்து வருந்துகின்றான். தலைவி தன்னைப் பழித்துப் பேசினாலும், வன்மொழியே கூறினும், தான் பணிமொழியே பகர்கின்றான். இவையெல்லாம் தலைவி இல்லறத்தின்கண் பெற்ற ஏற்றத்தினையே பெரிதும் எடுத்துக்காட்டுவனவாகும்.

பிற்காலப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பெண்களின் உடல் வருணனையினைச் சங்க இலக்கியங்களில் அருகியே காணலாம். பெண்ணின் உள்ள இயல்பே-மனப்பண்புகளே உளவியல் நுட்பமே (Psychology) நன்கு விளக்கப்பெறும். பெண்கள் உயர்ந்த கற்போடும் குற்றமற்ற பண்பாட்டோடும் யாண்டும் (எங்கும்) இணைத்துப் பேசப்பட்டிருப்பதனைக் காணலாம்.

"ஒருவன் சிறந்த மனிதனாவதற்கு மனிதனின் மூளை, பெண்ணின் இருதயம், குழந்தையின் உணர்ச்சி ஆகிய மூன்றும் தேவை" எனக் கூறியிருக்கிறார் மறைந்த மாமேதை இராஜாஜி அவர்கள்.

சங்ககால மகளிர் இளமைக் காலத்தில் களவுக் காலத்தில் ஆணின் மனங்கவர்ந்த தலைவியாகவும், இல்லற வாழ்வில் ஈடுபட்ட காலையில் வாழ்க்கைத் துணைவியா கவும், முதிய வயதில் கணவனைக் கருத்துடன் ஓம்பும் காரிகையாகவும் விளங்கினாள். எனவேதான் தலைவியோடு தலைவன் மனங்கலந்து இணையும் திருமணம் 'துறக்கவுலகத் தின் பயிற்சிப்பள்ளி அல்லது தோட்டமாக' அமைந்தது.

'ஓர் பண்பு நிறைந்த மனைவியே அவள் தன் கணவ னுக்கு விலையுயர்ந்த முடியாவாள்'' என்ற விவிலிய நூலின் பழமொழிக்கொப்பச் சங்ககால மகளிர் தம் பண்புச் சிறப் பால் வீடும் விளக்கமுற்றது; நாடும் நன்மை எய்தியது எனலாம்.

இறுதியாக அதே நேரத்தில் உறுதியாகக் கூறத்தக்கது என்னவெனில் சங்ககாலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் பெற்றிருந்த இடம் தனிச் சிறப்பு வாய்ந்தது என்பதாகும்.



மனைவியர் இளைய மனிதர்க்கு இளம்வயதில் தலைவியராகவும், நடுத்தர வயதில் துணைவர்களாகவும், முதிய வயதில் செவிலியராகவும் திகழ்கின்றனர்.

—பிரான்சிஸ் பேகன்

கடவுள் எல்லாவிடங்களிலும் நீக்கமற நிறைந்து ஒளிர முடியாது; எனவே தனக்கு மாற்றாகத் தாயரைப் படைத்தான்.

—ஓர் யூதப் பழமொழி

குழந்தைகளின் உதடுகளிலும் உள்ளத்திலும் தாய்மார்கள் கடவுளாகத் திகழ்கிறார்கள்.

—தாக்கரே

குழந்தையின் எதிர்காலம் தாய்மார்களின் கைவினையாக அமைகின்றது.

—நெப்போலியன்

தாய்மார்கள் எவ்வாறு உருவாக்குகிறார்களோ அவ்வாறே மனிதர்கள் அமைகிறார்கள்.

—எமர்சன்

மனைக்குவிளக் காகிய வாணுதல்

—புறநானூறு:314:1

மனைக்கு விளக்கம் மடவாள்

—நான்மணிக்கடிகை: 105:1

ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை.

—பாலைக்கலி: 18:9-11

இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே

—அகநானூறு:12:5

மறுவில் கற்பில் வாணுதல் கணவன்

—திருமுருகாற்றுப்படை:6



**சி. பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத்தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர்!

இருபது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். 'பெருந்தகை மு.வ. 'ஆங்கிலத்தில் ஒரு நூல்' சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு. வ. வின் செல்லப்பிள்ளை சி. பா. அவர் புகழ்பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி. பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

—*மா. செ.*

Wrapper Printed at Neo Art Press, Madras-14